மாலை: 50 மணி : 5 மே 2008 விலை ரூ. 10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலையத் துறை வெளியீடு

## காலம் அறிவான்
## கருணை புரிவான்
## குன்றக்குடியான்



# அருள்மிகு கரூர் மாரியம்மன் திருக்கோயில்

## கரூர்.

### (பசலி 1417) 2008–ஆம் ஆண்டு திருவிழா விபரம்



கடவுள் வாழ்த்து

செய்ய கரு வூரில் திகழ்மாரி யம்மைதனை
வையமிசை கண்டு வணங்கினோர் துய்ய
நலமெலாம் எய்தியே நாளும் வளம்பெற்றுத்
தல மீதில் வாழ்வர் தழைத்து.

–திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

கரூர் மாவட்டம், கரூர் வட்டம், கரூர் நகரில் எழுந்தருளியுள்ள அருள்மிகு மாரியம்மன் உற்வசம் திருவள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 29-ஆம் நாள் (11.5.2008) ஞாயிற்றுக்கிழமை கம்பம் நடுதல் முதல் வைகாசி மாதம் 26-ம் நாள் (8.6.2008) ஞாயிற்றுக்கிழமை முடிய பின்கண்ட விபரப்படி அதிவிமரிசையாக நடைபெறும். பொதுமக்களும், சேவார்த்திகளும் உற்சவத்திற்கு வருகைதந்து திருவருள் பெற்றுய்ய வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

**முக்கிய திருநாட்கள்**

| | | |
|---|---|---|
| 11.05.2008 | ஞாயிறு | கம்பம் நடுதல் |
| 16.05.2008 | வெள்ளி | பூச்சொரிதல் |
| 18.05.2008 | ஞாயிறு | காப்பு கட்டுதல் |
| 26.05.2008 | திங்கள் | திருத்தேர் |
| 28.05.2008 | புதன் | கம்பம் ஆற்றுக்கு அனுப்புதல் |
| 05.06.2008 | வியாழன் | பஞ்ச பிரகாரம் |
| 06.06.2008 | வெள்ளி | புஷ்ப பல்லக்கு |
| 07.06.2008 | சனி | ஊஞ்சல் |
| 08.06.2008 | ஞாயிறு | அம்மன் குடிபுகுதல் |

**பிரார்த்தனை திருநாட்கள்**

25, 26, 27, 28.05.2008 ஆகிய நாட்களில்

**மாவிளக்கு, பால்குடம்**

26,27.05.2008 தேதிகளில் அக்னிசட்டி, அலகு, காவடி

இவண்

**கே.முத்துக்கருப்பன் (என்கிற) முத்துக்குமார், எம்.காம்.,**

பரம்பரை அறங்காவலர்




# திருக்கோயில்


| திருவள்ளுவர் | ஆண்டு 2039 | வைகாசி |
|---|---|---|
| மாலை 50 | மணி 5 | மே 2008 |


பேரன்புடையீர் வணக்கம்.

கோடையின் வெப்பம் படிப்படியாகத் தணியும் வைகாசி மாதம் வந்து விட்டது. வைகாசியின் பின்பகுதியில் குயில்கூவ மயில் ஆட வசந்தம் வருகிறது. வசந்தத்தில் பொதிகைத் தென்றலுடன் பைந்தமிழும் கலந்து மணம் வீசி வருகிறது. இவ்வேளையில் தென் தமிழ்க் கடவுளான, முருகப்பெருமானை அவனுக்குரிய வைகாசி விசாகத்தையும் போற்றுகின்றோம்.

அருள்மிகு முருகனின் அருட்பெயர் அர்ச்சனையுடன் இந்த மாத இதழ் மலர்கிறது. தொடர்ந்து தமிழ் வளக்கும் மதுரையில் ஆட்சிசெய்யும்அன்னை அருள்மிகு மீனாட்சியின் அடியவர்களை வியந்து போற்றி கட்டுரை வரைந்துள்ளார் பொற்கிழி கவிஞர் சொ.சு.மீ.சுந்தரனார்.

அதைத் தொடர்ந்து, நாட்டுப்புற வழக்காறுகள் வைணவ உரை நூல்களில் கையாளப்பட்டுள்ள அருமைகளை விளக்கும் திரு.வேலூர் ம.நாராயணன் அவர்களின் கட்டுரை வலம் வருகிறது. இது நமது நாட்டுப்புற இலக்கியப் பெருமைகளை விளக்குவதாக உள்ளது.

அடுத்ததாக, சிங்கபெருமாள் கோயிலில் வீற்றிருந்து அருள்புரியும் அருள்மிகு நரசிம்மசுவாமி திருக்கோயிலின் பெருமைகளைப் பேசுவதாக இராஜகோலாகல சிங்கப் பெருமாள் எனும் கட்டுரை மலர்ந்துள்ளது. இங்கே பெருமானை இராஜதர்பாரில் வீற்றிருக்கும் மகாராஜாவாகக் கண்டுகளிப்பதில் பரவசமடைகிறோம்.

அதிஉக்ர அட்டகாச நரசிம்மரைத் தொடர்கிறது மோனம் என்பது ஞானவரம்பு என்னும் மன்னார்குடி திரு.சுகுமாரனின் கட்டுரை. புயலுக்குப் பின் அமைதி என்பது போல ஆர்ப்பரிப்புக்குப் பின் அமைதியின் எல்லையான மௌனத்தை இங்கே காண்கிறோம்.

மௌன நிலை நின்று ஞானநெறி நிற்பார்க்கு இறைவன் ஆத்ம ஞானத்தை உபதேசிப்பதைக் காண்கிறோம். ஆத்மஞானத்தைத் தொடர்ந்து அருள் பொங்கும் தலமான ஆரூரின் பெருமைகளையும் அங்கு நடைபெற்ற ஆழித் தேரோட்டத்தையும் வண்ணப்படங்களில் கண்டு மகிழலாம்.

சிறப்புக் கட்டுரைகளாக கரூர் மாரியம்மன் கோயில், கணக்கில் வராதவரவும் கணக்கில் அடங்காத லாபமும் என்பவை வெளியாகியுள்ளன. பின்னைய கட்டுரையில் மாணிக்கவாசகர் ஏன் அறுபத்துமூன்று நாயன்மார்கள் வரிசையில் இடம் பெறவில்லை என்பதற்கான காரணத்தை விளக்குகிறார் சேத்துப்பட்டு சித்தாந்த ரத்தினம் டாக்டர் எம்.ஆர்.சந்தானம் அவர்கள்.

வைகாசி விசாகம் என்பது முருகனுக்கே உரியது என்பதாதலின் முருகன் மண்மேல் வந்து உலவி நின்ற தலமான திருவிடைக்கழி பற்றியும், திருப்போரூர் பற்றியும் விளக்கும் கட்டுரைகள் வெளியாகியுள்ளன. இதில் ரஞ்சிதகுஞ்சரி மணவாள முருகனின் அற்புத கோலத்தையும், திருப்போரூர் முத்துக்குமார சுவாமி கோலத்தையும் கண்டுகளிக்கலாம். எருமைவெட்டி பாளையத்தில் வீற்றிருக்கும் அருள்மிகு இராமபிரானின் பெருமைகளை நமக்கு அளித்துள்ளார் பனையபுரம் திரு. அதியமான் அவர்கள்.

இவற்றுடன் வழக்கம் போல் உலகம் உய்ய உதித்த உடையவர் தொடரும் வெளிவந்து நம்மை மகிழ்விக்கிறது.

இந்த அற்புதமான கட்டுரைகளை அன்பர்கள் மனதில் இருத்திப் படித்துப்பயன்பெற வேண்டுகிறோம்.

எங்கும் நிறைந்து இன்பமயமாய் உணர்வுக்குள் உணர்வாய் பரந்து நிற்கும்இறையருளால் எல்லாரும் எல்லாமும் பெற்று இன்பமுடன் வாழப் பிரார்த்திக்கிறேன்


(கு. பிச்சாண்டி, இ.ஆ.ப.,)
சிறப்பு ஆணையர்

இந்து சமய அறநிலையத் துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை – 6900 034

# குறளோவியம்



அத்தியெனும் வணிகன் அகமும் முகமும் வாடிய நிலையில் வள்ளுவரைக் காண வந்தான். “சிரிப்பு தழைத்திருக்கும் உன் முகத்தில் கவலையின் ஆதிக்கம் ஏற்படக் காரணம் யாது? “ குறளார் உருக்கமுடன் வினவினார்.

அத்தியின் விழிகள் மழைத்துளி உதிர்க்கும் முகில்களாயின. தழுதழுத்த குரலில் அவன் பேசினான்.

“பெருமகனாரே நான் பாடுபட்டுத் தொழில் செய்து சிறுகச்சிறுகப் பொருள் சேர்த்து ஊர்மெச்சும் வணிகனானேன். தங்களுக்கும் அது நன்கு தெரியும். அரண்மனை கூடக் கட்டிக்கொண்டு வாழ்வான். அத்தியென்று உற்றார் உறவினர் பெருமையுடன் கூறினர். ஆனால் இன்று என் நிலை என்ன தெரியுமா? ஆலமரத்தடி நிழலில் கூடத் தங்குவதற்கு எனக்கு இடம் கிடைக்குமா? இப்படியொரு அவலம் வந்து சூழ்ந்துவிட்டது,“

வள்ளுவர் திகைத்தார்.

“உண்மையாகவா ? உன் தொழில் கெடவும் வளமைப்பொழில் கருகவும் காரணம் என்ன ? எப்படி நடந்தது இந்த மாற்றம் ?"

அத்தியினால் உடனடியாக விளக்கமளிக்க முடியவில்லை. சிறிது நேரம் அமைதியாக இருந்தான்.

“கொஞ்சம் கொஞ்சமாக குவித்த பொருளை பன்மடங்கு பெருக்கிட வேண்டுமென்று அயல் நாட்டுடன் வாணிபம் நடாத்தக் கப்பல் ஒன்று வாங்கினேன். அதில் கொற்கை முத்தும், மிளகும், மயில்தோகையும் ஏற்றியனுப்பினேன் யவனத்திற்கு. கைப்பொருள் அத்தனையும் போட்டு அந்தக் கப்பல் நிறைய ஏற்றுமதி செய்த பொருள், யவன நாட்டுக்குச் சென்றிருக்குமேயானால் அதற்கென எனக்குக் கிடைக்கும் வருமானம் அளவிட முடியாததாக இருந்திருக்கும். ஆனால் ஆனால் ...!

அழத்தான் முடிந்தது அத்தியினால். அதற்கு மேல் எதுவும் சொல்ல முடியவில்லை. வள்ளுவர் புரிந்துகொண்டார். அவனை ஆறுதலாகத் தழுவியவாறு கேட்டார் “புயல் காற்றில் அந்தக் கப்பல் கடலில் கவிழ்ந்துவிட்டது அப்படித்தானே ? என்று

ஆம் என்பதை அத்தி, தன் தலையை அசைத்ததின் வாயிலாகக் காட்டிக் கொண்டான். வள்ளுவர், அத்தியை அமைதிப்படுத்தி உணவளித்து உறங்கச் செய்தார். மறுநாள் பகல் முழுதும் அத்தியின் மனத்தைத் தேற்றுகிற வேலையிலேயே ஈடுபட்டார். மீண்டும் தொழிலைத் தொடங்கி வாழ்வில் நிமிர்ந்திட வழியுண்டு நடந்ததையெண்ணி வளைந்து கிடக்காமல் சோகம் துடைத்துப் பீடு நடைபோட வேண்டும் என்று அறிவுரை கூறினார். அத்தியும் ஓரளவு ஊக்கம் பெற்று எழுந்தான். வள்ளுவரும் அவனுடன் சிறிது தொலைவு நடந்தார்.

“பெருந்தகையே ஒவ்வொரு பொன்னையும் என் வீட்டுப் பேழையில் அடுக்க ஒவ்வொரு நாளும் நான் உழைத்தேன். சேரும்போது ஒவ்வொன்றாக வந்த பொன் இப்போது போகும்பொழுது ஒரேயடியாக ஒரே நாளில் போய்விட்டது பார்த்தீர்களா ?

என்று அத்தி, ஆதங்கத்துடன் திருவள்ளுவரிடம் சொன்னான். வள்ளுவர் நின்றார்.

அதோ பார் அத்தி அது என்ன தெரிகிறதா ? கூத்தரங்கம். அந்தக் கூத்தரங்கத்தில் கூத்துப் பார்த்துக் களிக்க மக்கள் வரும்போது அரங்கத்திற்குள்ளே ஒவ்வொருவராகத்தான் வருவார்கள் இல்லையா.

"ஆமாம்! ஆமாம்!"

"ஆனால்; கூத்து முடிந்து மக்கள் செல்லும்போது அப்படியே கூட்டமாகக் கலைந்து சென்று விடுவார்கள்! அல்லவா ?"

"ஆமாம்! ஆமாம்!"


"அதைப் போலத்தான் செல்வம் வந்து சேர்வதும் போவதும். கூத்தரங்கில் கூட்டம் சேர்வதைப் போலச் செல்வம் சிறிது சிறிதாகச் சேரும்! அந்தச் செல்வம் நம்மை விட்டு நீங்கிப் போவது, கூத்து முடிந்ததும் கூட்டம் கலைவதைப் போன்றதாகும்.

அடடா, என்ன உவமை என்ன உவமை. இப்படியொரு உவமையைக் கேட்ட எனக்கு, என் கப்பல் மூழ்கிய கவலைகூடத் தெரியவில்லை. இத்தகைய அற்புத உவமையொன்றைத் தாங்கள் கூற வேண்டுமென்பதற்காகவே, நான் சேர்த்த பொருளனைத்தும் என்னை விட்டு நீங்கியது போலும்.

இப்படி வியந்து பாராட்டிக்கொண்டே அத்தி வள்ளுவரின் கைமலர்களை எடுத்துத் தன் கண்களில் ஒத்திக் கொண்டான்.

"கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று"

அதிகாரம்: 34 நிலையாமை பாடல்: 332



மாண்புமிகு முதல்வர்
டாக்டர் கலைஞர்

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் குறளோவியம் நூலிலிருந்து
நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது

## இதழின் உள்ளே


1. அருள்மிகு முருகவேள் 108 போற்றிகள் – 4
2. அம்மன் அடியார்கள் – சொ.சு.மீ. சுந்தரம் – 6
3. வைணவ உரைகளில் நாட்டுப்புற வழக்காறுகள் – வேலூர். ம. நாராயணன் – 9
4. இராஜ கோலாகலச் சிங்க பெருமாள் – 12
5. மோனமென்பது ஞானவரம்பு – க. சுகுமாரன் – 14
6. மலை மீது சாளக்கிராம ராமர் – பனையபுரம் அதியமான் – 17
7. கரூர் – அருள்மிகு மாரியம்மன் – 22
8. உலகம் உய்ய உதித்த உடையவர் பெ. இராமநாதப்பிள்ளை – 25
9. திருவிடைக்கழி திருத்தலம் வலையப்பேட்டை ரா. கிருஷ்ணன் – 28
10. அவசியம் – அருள்மொழி அரசு திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் நினைவலைகள் – 30
11. கணக்கில் வராத வரவும் கணக்கிலடங்காத இலாபமும் – டாக்டர், எம்.ஆர், சந்தானம் – 34
12. திருவருள் புரியும் திருப்போரூர் அருள்மிகு கந்தசுவாமி– ஸ்ரீதரன் – கண்காணிப்பாளர்(ஓய்வு) தொல்லியல் துறை – 37

# அருள்மிகு முருகவேள்

## 108 போற்றிகள்




1. ஓம் அறுமுகச் சிவமே போற்றி
2. ஓம் அறுகுசூடிதன் இளையாய் போற்றி
3. ஓம் அழகினுக் கழகே போற்றி
4. ஓம் அருளினுக் கருளே போற்றி
5. ஓம் அலங்கார நாயக போற்றி
6. ஓம் அநுபூதி நாதனே போற்றி
7. ஓம் அன்பின் அண்ணா போற்றி
8. ஓம் ஆறுமுக அப்பா போற்றி
9. ஓம் இமையோர் இறைவா போற்றி
10. ஓம் இமயப் புகழோய் போற்றி
11. ஓம் இருளினை நீக்குவாய் போற்றி
12. ஓம் இருசுடர் ஆனாய் போற்றி
13. ஓம் ஈசனார் குருவே போற்றி
14. ஓம் ஈரேழ் உலகோய் போற்றி
15. ஓம் உமையருட் செல்வா போற்றி
16. ஓம் உயர்மறைப்பொருளே போற்றி
17. ஓம் எஃக வேலுடையாய் போற்றி
18. ஓம் எமபயம் நீக்குவாய் போற்றி

19. ஓம் எழில் அற்புதனே போற்றி
20. ஓம் ஏறுமயில் ஏறி போற்றி
21. ஓம் ஒப்பிலா இறைவா போற்றி
22. ஓம் ஓங்காரப் பொருளே போற்றி
23. ஓம் ஔவைக் கரசே போற்றி
24. ஓம் கங்கையின் மைந்தா போற்றி
25. ஓம் கடம்பா இடும்பா போற்றி
26. ஓம் கதிர்காமக் கந்தா போற்றி
27. ஓம் கந்தா முருகா போற்றி
28. ஓம் கவிமாலை அணிந்தாய் போற்றி
29. ஓம் கார்த்திகேயனே போற்றி
30. ஓம் காவற் காரனே போற்றி
31. ஓம் காவடி விருப்பனே போற்றி
32. ஓம் குகனென நின்றாய் போற்றி
33. ஓம் குமரகிரி வாசனே போற்றி
34. ஓம் கும்பமுனிக் குருவே போற்றி
35. ஓம் குராவடி வேலனே போற்றி
36. ஓம் குறத்திக் கோவே போற்றி
37. ஓம் குறிஞ்சிக் கிழவா போற்றி
38. ஓம் குன்றம் எறிந்தோய் போற்றி
39. ஓம் குன்றுதோ றாடுவாய் போற்றி
40. ஓம் கூத்தன் மைந்தா போற்றி
41. ஓம் கூத்தாடு மயிலோய் போற்றி
42. ஓம் கொற்றவை குமரா போற்றி
43. ஓம் கொற்றதனி வேலோய் போற்றி
44. ஓம் கோலமயில் குமரா போற்றி
45. ஓம் கோரும்வரம் தருவாய் போற்றி
46. ஓம் சங்கப் புலவா போற்றி
47. ஓம் சரவண பவனே போற்றி
48. ஓம் சகல நலம் அருள்வாய் போற்றி
49. ஓம் சண்முகக் குமரா போற்றி
50. ஓம் சிவகுரு நாதா போற்றி
51. ஓம் சிவசுப்பிர மணியா போற்றி
52. ஓம் சீரலைவாய்த் தேவே போற்றி
53. ஓம் சூர் முதல் தடிந்தாய் போற்றி
54. ஓம் செஞ்சுடர் வேலா போற்றி
55. ஓம் செவ்வேள் பரமா போற்றி
56. ஓம் செந்தில் வாழ்வே போற்றி
57. ஓம் செந்தமிழ்ச் செல்வா போற்றி
58. ஓம் செங்கோட்டு வெற்பா போற்றி
59. ஓம் சேவற் கொடியோய் போற்றி
60. ஓம் சேந்தா முருகா போற்றி
61. ஓம் சைவக் கொழுந்தே போற்றி
62. ஓம் ஞானச் சுடரே போற்றி
63. ஓம் ஞானப் பழமே போற்றி
64. ஓம் தங்க வேலனே போற்றி
65. ஓம் தண்டாயுதபாணியே போற்றி
66. ஓம் தமிழ்மா மறையே போற்றி
67. ஓம் தமிழெனும் அழகே போற்றி
68. ஓம் திகழ்மணி மார்பா போற்றி
69. ஓம் திகழ்மயில் வாகனா போற்றி
70. ஓம் திருச்செந் தூரா போற்றி
71. ஓம் திருப்பரங் குன்றா போற்றி
72. ஓம் திருஆவி னன்குடியாய் போற்றி
73. ஓம் திருவே ரகக்குருவே போற்றி
74. ஓம் திருத்தணிகைத் தமிழே போற்றி
75. ஓம் திருப்புகழ் விருப்பா போற்றி
76. ஓம் திருமால் மருகா போற்றி
77. ஓம் திருவருட் செல்வா போற்றி
78. ஓம் தீமையைத் தீர்ப்பாய் போற்றி
79. ஓம் துங்கக் கொடையோய் போற்றி
80. ஓம் தூ மறைக்கு ஆதி போற்றி
81. ஓம் தெய்வானை கணவா போற்றி
82. ஓம் தேவர்தம் கோவே போற்றி
83. ஓம் நக்கீர நாயகா போற்றி
84. ஓம் நற்றமிழ் வேந்தே போற்றி
85. ஓம் பழநிமலை வாழ்வே போற்றி
86. ஓம் பழமுதிர்ச் சோலையாய் போற்றி
87. ஓம் பன்னிரு தோளாய் போற்றி
88. ஓம் பதினெண்கண் மலர்ந்தாய் போற்றி
89. ஓம் பிணிமுகம் ஏறுவாய் போற்றி
90. ஓம் பிணிக்குலம் ஓட்டுவாய் போற்றி
91. ஓம் பிரணவம் மொழிந்தாய் போற்றி
92. ஓம் பிரமனைக் குட்டினாய் போற்றி
93. ஓம் பிறவா நெறி அருள்வாய் போற்றி
94. ஓம் மலைமகள் மகனே போற்றி
95. ஓம் மன்றாடி மைந்தா போற்றி
96. ஓம் மாயோன் மருகா போற்றி
97. ஓம் முத்தமிழ் முருகா போற்றி
98. ஓம் முத்தைய வேளே போற்றி
99. ஓம் முருகெனும் அழகே போற்றி
100. ஓம் முருகாற்றுப் படையோய் போற்றி
101. ஓம் மூவர்க்கும் முதல்வா போற்றி
102. ஓம் வள்ளி நாயகனே போற்றி
103. ஓம் வழித்துணைக் குழகா போற்றி
104. ஓம் விழித்துணை அழகா போற்றி
105. ஓம் வெற்றிவேல் முருகா போற்றி
106. ஓம் வேடர்தம் மருகா போற்றி
107. ஓம் வையச் சுடரே போற்றி
108. ஓம் வைர வேல் வீரா போற்றி போற்றி.

# அம்மன் அடியார்கள்

– சென்ற இதழ் தொடர்ச்சி

பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த மன்னன் திருமலை நாயக்கர், மதுரை மீனாட்சியம்மையின் திருவருள் பெற்றவர். திருச்சிராப்பள்ளியைத் தலைநகராகக் கொண்டு அரசு செய்தவன். 1623ல் பட்டத்திற்கு வந்து 36 ஆண்டுகள் ஆட்சிசெய்தவன். ஒருமுறை மன்னன் திண்டுக்கல்லுக்கு வந்தபொழுது சீதள நோயால் மிகவும் சிரமப்பட்டான். மதுரைக்கு வரவேண்டியவன், நோய் மிகுதியால் திருச்சிக்கே திரும்ப நினைத்தான். அவன் கனவில் ஒரு சித்தர் தோன்றி 'தலைநகரை மதுரைக்கு மாற்று மீனாட்சியையும் சொக்கலிங்கரையும் வழிபட்டு ஆட்சிசெய் – நோய் மாறும்' என்று கூறினார். மறுநாள் நோய் மாறிற்று தலைநகரம் மதுரைக்கு மாறிற்று. அன்னையின் பக்தனாய் மன்னன் மாறினான். திருமலை நாயக்கர் மகால் கட்டினான். மீனாட்சியம்மன் சந்நிதி, சொக்கலிங்கர் சந்நிதி இரண்டையும் இணைத்துப் பெரிய கோயில் ஆக்கினான். மீனாட்சி சந்நிதியில் தரையில் படுத்து வணங்குவது போல் தன் உருவத்தைச் செதுக்கிவைத்தான். வழிபடும் அடியார் திருப்பாதம் தன்மீது பட வேண்டும் என்று இப்படிச் செய்தான். குமரகுருபரர் பிள்ளைத்தமிழ் பாடிய போது மீனாட்சியம்மை குழந்தை வடிவில் தன் மடியில் வந்து உரிமையோடு உட்காரும் பேறு பெற்றான்.



மன்னனுடைய மதியமைச்சர் நீலகண்ட தீட்சிதர். அவர் அன்னை மீனாட்சியின் அருள் பெற்ற பக்தர். மன்னன் வைகாசித் திங்களில் இளவேனில் விழா நடத்தி மீனாட்சியையும் சொக்கநாதரையும் எழுந்தருளச் செய்ய இருக்க வைக்கப் புதுமண்டபம் கட்டினான். அமைச்சர் நீலகண்ட தீட்சிதரின் மேற்பார்வையில் சிற்பி சுமந்திர மூர்த்தி பொறுப்பேற்றார். அருமையான சிற்பங்கள் செதுக்கப்பட்டன. அரசியின் வலது முழங்காலுக்கு மேல் சில் பெயர்ந்து போய், பின்னம் ஏற்பட்டது. என்ன முயன்றும் சரிசெய்ய முடியவில்லை. சிற்பி திகைத்துத் தீட்சிதரிடம் கூற, தீட்சிதர் 'அது அப்படித்தான் இருக்கும். அப்படியே இருக்கட்டும்' என்று மீனாட்சியம்மை திருவருளால் உணர்ந்துரைத்தார். பின்னமுள்ள காலுடன் கூடிய அரசியின் சிலையை மன்னன் பார்த்தான். சினமுற்றான். சிற்பியைக் கேட்டான். சிற்பி எல்லாவற்றையும் கூற நீலகண்ட தீட்சிதரை இழுத்துவாருங்கள் என்று உத்தரவிட்டான்.

மீனாட்சியம்மையின் ஆலயத்தில் வழிபாடு செய்து கொண்டிருந்த அமைச்சரிடம் சேவகர் சென்று உடனே வரச்சொல்ல, அமைச்சர் அறிந்து கொண்டார். அரசன் சந்தேகப்படுகிறான். அவன் கொடுக்கும் தண்டனையை நானே கொடுத்துக் கொள்கிறேன் என்று தீபாராதனையைத் தொட்டுக்கும்பிடுவது போல, எரியும் சூடத்தை எடுத்து இரண்டு கண்களிலும் வைத்துக் கொண்டார். கண்கள் அவிந்து விட்டன. மன்னன் அதை அறிந்து பெரிதும் வருந்தினான் தவறு செய்யாதவர் தனக்குத் தானே கொடுத்துக்கொண்ட தண்டனையின் பலன் அரசனைச் சென்று வெப்பு நோயாகப் பற்றியது. வெப்பம் தீரச் சொக்கலிங்கப் பெருமானையும் மீனாட்சி அம்மையையும்

தெப்பத்தில் வை என்று அமைச்சர் கூற மன்னன் வண்டியூரில் தெப்பக்குளம் வெட்டித் திருவிழாக் கண்டு தன் பிறந்த நாளான தைப்பூச நாளில் தெப்பம் சுற்றிவரச் செய்தான். வெப்பு நோய் மாறியது.



கண்களை இழந்த நீலகண்ட தீட்சிதர் மீனாட்சி ஆலயத்தைப் பழக்கத்தால் சுற்றி வந்தார். அவருக்கு முன்னால் அன்னை மீனாட்சி சென்று உள்ளத்தில் உணர்த்தி வழிகாட்டினாள். ஆதிசங்கரர் மீனாட்சி பஞ்சரத்தினம் பாடியது போல, தீட்சிதர் ஆனந்த சாகரஸ்தவம் பாடினார். அம்மையை வர்ணித்துப் பாடிக் கொண்டே வந்தவர் அவளுடைய திருவடியைப் பாடத் தொடங்கி இந்தத் திருவடியை நான் என்று காண்பேன்? எப்படிப் பாடுவேன் என்று உருகிநிற்க மீனாட்சியம்மை அவர் கண்களுக்கு ஒளி கொடுத்து வாழ்வித்தாள்.

**பீட்டர் ரோஸ் (பாண்டியன்)**


மதுரையில் ஆட்சி செய்த மாவட்ட ஆட்சியாளர் பீட்டர் ரோஸ் என்பவர் வெள்ளைக்காரர். மீனாட்சியின் பக்தர். அதனால் ரோஸ் பாண்டியன் என்று அழைக்கப்பட்டவர். நாடோறும் குதிரையில் ஏறிக்கொண்டு, நான்கு சித்திரை வீதிகளின் வழியாக மீனாட்சி திருக்கோயிலை வலம் வருவார். ஒரு நாள் தன்னுடைய மாளிகையின் தனி அறையில் அவர் தூங்கும் பொழுது யாரோ தட்டி எழுப்பியது போல் தோன்றியது. விழித்தார் சின்னஞ்சிறு பெண்போலச் சிற்றாடை இடை உடுத்தி அழகே வடிவாக ஒரு சிறுமி காட்சி தந்தாள். தன் பின்னால் வரச்சொல்லிக் கைகாட்டினாள். பீட்டர் வெளியில் வந்தார். வாயிற்படியைத் தாண்டினார். வந்த பெண் மறைந்தாள். இடி இடித்தது. அவர் படுத்திருந்த அறை இடிந்து விழுந்தது. தன்னைக் காப்பாற்றிய பசுவைக் கன்று அடையாளம் கண்டுகொண்டது. ஆலயத்துக்கு ஓடிய பீட்டர் அன்னை திருவடியில் தலைவைத்து அழுதார். 'என்னைக் காக்க நீ காலில் செருப்புக் கூட இல்லாமல் வந்தாயே அம்மா பூப்பட்டால் வாடும் உந்தன் பொன்னார் திருமேனி பஞ்சுபட்டால் பாடுபடும் பங்கயமாம் பாதங்கள்' என்று வருந்தினார். அன்னைக்குத் தங்கத்தில் காலணிகள் செய்து வைத்தார். ஆடிப்பூர உற்வசத்தில் எட்டாம் நாள் திருவிழாவில் இந்தக் காலணிகள் அன்னைக்கு அணிவிக்கப்படுகின்றன. அன்னையின் அடியார் கூட்டத்தில் வெள்ளைக்காரரும் சேர்ந்து கொண்டார். அவர் அப்பாலும் அடிச்சார்ந்த அடியாராய்க் காட்சி தந்தார்.

**அமராவதி புதூர் வயிநாகரம் நாகப்பசெட்டியார்**

மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயிலில் முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர் கட்டிய வடக்குக் கோபுரம் 1870 ஆம் ஆண்டு வரை மொட்டைக் கோபுரமாக, நிலை மட்டத்தோடு இருந்தது. வயிநாகரம் நாகப்பசெட்டியார் என்ற சிவனருட்செல்வர் இக்கோபுரத்தை

முழுக்கோபுரமாக்க முனைந்து சிற்பிகளை அழைத்துக் கேட்டார். அவர்கள் மறுத்து விட்டார்கள். 'மொட்டைக் கோபுரத்தின் கீழே முனீஸ்வரர் இருக்கிறார். அவர் கோயிலின் மேலே ஏறித்தான் வேலை செய்ய வேண்டும். அவர் கோபுரத்தில் ஏறியவர்கள் எட்டு நாட்களில் இறந்து போவார்கள். எனவே உயிரை விட நாங்கள் தயாராக இல்லை' என்று சிற்பிகள் கூறினர்.

உடல் பொருள் இரண்டையும் மீனாட்சிக்கே தந்துவிட்ட நாகப்ப செட்டியார் ஆவியையும் அவள் திருவடியில் அர்ப்பணிக்க எண்ணினார். கோபுரத்தில் ஏறி நிலைமட்டத்தின் மேல் முதல் செங்கல்லைத் தானே வைத்தார். மீனாட்சியின் கடைக்கண் பார்வைக்கு முன் எமன் விடும் பாசக்கயிறு இற்றுப் போகும் என்று மக்கள் உணர எட்டு நாட்களாயின. ஒன்பதாம் நாள் சிற்பிகள் வந்தார்கள். செட்டியார் உடல்நலத்தோடும் உள்ளமகிழ்வோடும் இருக்கக்கண்டார்கள். திருப்பணி தொடங்கப்பெற்று மொட்டைக் கோபுரம் முழுக் கோபுரமாயிற்று. மண்டபங்கள் பழுதுபார்க்கப்பட்டன. நந்தவனம் அமைக்கப்பெற்றது. திருக்கல்யாண மண்டபத்தின் முன் பகுதியில் மிகப்பெரிய செப்போடு மண்டபம் அமைக்கப்பெற்றது. மீனாட்சி திருக்கல்யாண உற்சவத்தைத் தன்மகள் திருமணம் போலச் சிறப்பாக ஆண்டு தோறும் நடத்தினார் நாகப்பர். இதனால் அவரை நாகப்ப பாண்டியன் என்றழைத்தனர் மக்கள். இதற்கு உதவிய அவர் தம்பியை, வேங்கடாசலச் செழியன் என்றும் பாராட்டினர்.



**"சீர் செய்த சித்திரை வீதிகள் நான்குக்<br>குட்பட்ட தெய்வக் கோயில்**

**ஆர் செய்தது? அரைக்காசு பெறுங் கத<br>வாணியும்பிறர்வந் தடித்ததுண்டோ?**

**பேர் செய்த நாகப்ப பாண்டியனும்<br>அவனுடயே பிறந்த கீர்த்தி**

**வேர்செய்த வேங்கடா சலச்செழியனும்<br>செய்து விளங்கினாரால்".**

என்று புலவர் பாடும் புகழ் கிடைத்தது.

அன்னையின் பணிக்குத் தன்னையே தரமுன்வந்த நாகப்பருக்கு அருட்காட்சி தர அன்னை தீர்மானித்தாள். திருப்பணிக்குப் பணம் தேவைப்பட்ட பொழுது தன்னிடம் கடன் வாங்கியிருந்த ஒருவரிடமிருந்து கடனை வசூல் செய்ய நாகப்பர், குதிரை பூட்டிய சாரட் வண்டியில் ஆத்தூர் என்ற ஊருக்குச் சென்றார். கடன் பெற்றவர் அங்கில்லை. இரவு நீண்ட நேரமாகியதால், ஒரு வீட்டுத் திண்ணையில் வண்டி மெத்தையைப் போட்டுப் படுத்து விட்டார். இரவில் மீனாட்சியின் அர்த்த சாமப் பிரசாதத்தை மட்டுமே சாப்பிடும் வழக்கமுடைய நாகப்பர் மனம் மீனாட்சி திருவடியைச் சுற்றி வந்தது. உடம்பு ஆத்தூரில் இருக்க உள்ளம் மதுரைக்குச் சென்று விட்டது. உள்ளக்கிழியில் உருவெழுதும் உயிரோவியமான மீனாட்சி ஆத்தூருக்கு வந்தாள். யாரோ தொட்டது போல் தோன்றியதும் நாகப்பர் கண்விழித்தார். மதுரைப்பதி தழையத் தழையும் கொடி – மலயத்துவசன் வளர்த்த பசுங்கிளி – அவனி தழைத்திட மவுளி புனைந்தவள் – அருள்சூற் கொண்ட அங்கயற்கண்ணம்மை, கையில் அர்த்த சாமப் பிரசாதம் கொண்ட வெள்ளித் தாம்பாளத்துடன் காட்சிதந்தாள். கண்பனிநீரரும்பக் கைகுவித்தார் நாகப்பர். பால் நினைந்தூட்டும் தாய், தாம்பாளத்தைக் கொடுத்து விட்டுத் தான் மறைந்தாள், நாகப்பர் வண்டிக்காரனுக்கும் சமையல்காரனுக்கும் பிரசாதம் தந்து தானும் உண்டார். மறுநாள் மதுரை வந்தார். இனி மதுரை எல்லையைத் தாண்டுவதில்லை என்று உறுதி கொண்டார். தன் மனைவி இறந்த பொழுது கூடச் சொந்த ஊருக்குச் செல்லவில்லை. ஒரு சிவராத்திரி நாளில், அன்னையின் திருவடியில் அமைதி உற்றார்.

தொடர்ச்சி அடுத்த இதழில்

பொற்கிழிகவிஞர்

சொ.சு.மீ.சுந்தரம்

# வைணவ உரைகளில் நாட்டுப்புற வழக்காறுகள்

திருமாலை முழுமுதற் கடவுளாக ஏற்றுக் கொண்டு வழிவழியாக அவரை வழிபட்டு வருபவர்கள் வைணவர்கள். விஷ்ணுவம் என்பதே வைணவம் என்றாகியது. தொல்காப்பியம், சிலப்பதிகாரம், பரிபாடல் போன்றவற்றில் திருமால் வழிபாடு பற்றிய செய்திகள் உள்ளன என்றாலும் இடைக்காலமான எட்டாம் நூற்றாண்டிலிருந்துதான் வைணவம் வீறு கொண்டு எழுந்து விசுவரூபம் எடுத்தது. சேர மன்னன் குலசேகரர், திருமங்கை மன்னன், பரகாலன் போன்ற அரசர்கள் வைணவ வளத்தில் ஆழ்ந்து ஆழங்கால்பட்டு ஆழ்வார்களாக உயர்ந்திருக்கின்றனர். வைணவம் பரவ பலவாறு உதவியுள்ளனர். தேன்தமிழில் திவ்வியப் பாசுரங்களைப் பாடியுள்ளனர். இன்றைக்கும் தமிழ் நலம் நாடுவோர் நெஞ்சங்களிலெல்லாம் சாதி–மதம்–இனம்–மொழி கடந்த நிலையில் நாலாயிர திவ்வியப் பிரபந்தம் செங்கோலாச்சி வருகின்றது.

நாலாயிர திவ்வியப் பிரபந்தப் பாடல்கள் ஓரளவு தமிழ்ப்பயிற்சியுடையவர்களும் எளிதாகப் படித்துப் புரிந்து மகிழக் கூடிய வண்ணம் திகழ்பவை. இப்பாடல்களுக்கு வைணவ அறிஞர்கள் பலர் உரையெடுத்துள்ளனர். அவர்களுள் திருக்குருகைப் பிரான் பிள்ளான், பட்டர், நஞ்சீயர், நம் பிள்ளை, பெரிய வாச்சான் பிள்ளை, வாதி கேசரி அழகிய மணவாள சீயர், மணவாள மாமுனிகள் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். இவர்களுக்கு முன்னோடியாக இருந்த வைணவச் சான்றோர்கள் நாதமுனிகள், ஆளவந்தார், இராமானுசர், எம்பார், திருமலை நம்பி போன்றோராவர்.

'மணிப்பிரவாள நடை' என்றொரு புதிய தமிழ் நடையில் பிரபந்தப் பாடல்களுக்கு உரையெழுதிய இவ்வுரையாசிரியர்கள் இடையிடையே தங்கள் காலத்தில் வழக்கிலிருந்த சில நாட்டு வழக்கங்களையும், மரபுகளையும் குறித்துச் சென்றுள்ளனர். அவை இன்றைய தலைமுறையினர்க்குச் சுவைமிகு செய்திகளாக அமைந்து பயன் நல்கும் என்பதால் அவற்றுள் சிலவற்றை இங்கு அறிந்து மகிழலாம்.

**அம்மான் பொடி**


பழங்காலத்தில் திருடர்கள் குழந்தைகளைக் கடத்துவதற்காக அவர்கள் மீது அம்மான் (மாமன்) என்று சொல்லி ஒருவகைப் பொடியைத் தூவுவார்களாம். உடனே, குழந்தைகள் மயங்கி 'அம்மான், அம்மான்' என்று சொல்லிக் கொண்டு அவர்கள் பின்னால் ஓடுவார்களாம். அவ்வாறு இறைவனின் முகம் அடியார்களுக்கு அம்மான் பொடி தூவியது போல் உள்ளது என்கிறார் உரையாசிரியர்.

**ஆனைக்குக் குதிரை வைத்தல்**

தன்னைக் காதலிக்கும் திருமகளுக்குத் திருமால் பிடி கொடாமல் விலகி விலகிச் செல்கிறாராம். இது யானைக்குக் குதிரை வைத்தல் போல் உள்ளதாம். முன்னாளில் யானையின் வேகத்தைச் சோதிப்பவர்கள் குதிரையை முன் நடத்தி யானையைப்பின் நடத்துவார்கள். யானையும் துதிக்கையாலே குதிரையைத் தொடுமாறு நெருங்கிச் செல்லும். ஆனால் தொட முடியாமல் திணறுமாம். இந்தச் செய்தி நமக்குப் புதிதாக உள்ளது அல்லவா?

**இராமடம் ஊட்டுவாரைப் போலே**

வீட்டிற்கு அடங்காத பிள்ளைகள் கண்டபடி அலைந்து திரிந்து இரவில் ஊர் மடத்தில் வந்துதங்கும். அவர்களின் தாய்மார்கள் தங்களின் மனங்கேளாது. யாரும் அறியா வண்ணம் மறைந்திருந்து அவர்களுக்கு உதவி செய்வார்கள். உணவு தருவார்கள். இதற்கு இராமடம் ஊட்டுதல் என்று பெயர். இங்கு இறைவன் தாய். நம்மில் பலர்



வேலூர் ம. நாராயணன்

வீட்டிற்கு அடங்காப் பிள்ளைகளாய் யுள்ளங் கொண்டவர்கள். நாம் உய்யும் பொருட்டு இறைவன் திருத்தி உதவுகிறார் என்பது குறிப்புப் பொருள்.

**உச்சிவீடு விடாதே**

'இடைவிடாமல்' என்பது பொருள். திருவேங்கடத்தான் திருவடிகளைப் போற்றினால் இதற்கு முன்பு உச்சி வீடும் விடாதே சென்ற பிறப்பு இறப்புகள் இனி ஒழியும் என்பர் உரையாசிரியர். வேலை செய்பவர்கள் உச்சி வேளையில் வேலையை விடுத்து ஓய்வெடுப்பார்கள் அந்த ஓய்வும் இல்லாமல் என்பது நேர்ப்பொருள்.

**உன்மத்தங்காய் தின்னப் பண்ணல்**

நம் ஊர்ப்புறங்களில் 'ஊமத்தங்காய்' என்பர். அதனைத் தின்றால் உன்மத்தம் (பைத்தியம்) பிடிக்கும் என்பர். அதாவது ஒரு வித மயக்கம் தோன்றுமாம். நம்மாழ்வார் தமக்கு நேர்வது அறியாதவாறு சிற்றின்பப் பொருள்களைக் காட்டித் தம்மை இறைவன் உன்மத்தங்காய் தின்னப் பண்ணினான் என்கின்றார்.

**எல்லாக் குளிக்கும் நிற்கும்**

முற்காலத்தில் ஆடவரும் மகளிரும் தங்கள் உடலில் நறுமணப் பொருள்களைப் பூசிக் கொள்வர். அவை குளித்தாலும் போகாது. சில ஐந்தாறு குளிக்கும் நிற்கும். சில இன்னும் சில காலம் நீடிக்கும். ஆனால் இறைவனின் நினைவு நம் நெஞ்சில் ஆழப்படிந்தால் அது எல்லாக் குளிக்கும் நிற்கும் என்பது பொருள்.

**ஓலக்க வார்த்தை**

சபையில் டம்பத்திற்காகப் பேசப்படுகின்ற ஆரவாரமான உறுதியற்ற போலிப் பேச்சு. இராமனைப் பரம் பொருள் என்று நான் கூறுவது ஓலக்க வார்த்தை அல்ல என்பார் நம்மாழ்வார்.

**கதிர் பொறுக்குதல்**

தேடிச் சேகரித்தில் என்பது பொருள். அறுவடைக்குப் பிறகு ஏழைகள் வயல்களில் சிந்திக்கிடக்கின்ற கதிர்களைப் பொறுக்கிச் சேகரிப்பார்கள். திருமாலின் அனுபவத்திற்கு முன்பு பிரமன் முதியோர் கதிர் பொறுக்கிக் கண்ட அனுபவம் ஈடாகாது என்பார் உரையாசிரியர்.

**கருமாரி பாய்தல்**

காஞ்சி மா நகரின் நடுவே குளத்தில் நட்டிருக்கும் இரண்டு கூரிய இரும்புத் தூண்களுக்கு நடுவே உயரே இருந்து குதிப்பது அரிய செயலாகக் கருதப் பெற்றது. இதற்குக் கருமாரி பாய்தல் என்று பெயர். நப்பின்னைப் பிராட்டியின் அழகு இனிமை இவற்றைக் காணக் கருமாரி பாய்தலும் தகும் என்பர் உரையாசிரியர்.

**கிழங்கெடுத்தல்**

அடியோடு அழித்தல், தமக்கு வேண்டாதவர்களை அவனை கிழங்கெடுக்க வேண்டும் என்று சிலர் இன்றும் நாட்டுப் புறங்களில் சொல்வதுண்டு. இங்கு உரையில், இராவணனைக் கிழங்கெடுத்த பெருமை இராமனையே சாரும் என வருகின்றது.

**நாயகக் கல்லான (நடுவிலோ மூலையிலோ வைக்கப்பட்டிருக்கும் பளு தாங்கும் கல்)**

பெருமை சேர்க்கும் முதன்மையான என்பது பொருள். உலகிற்கே "திருவில்லிப்புத்தூர்" நாயகக் கல்லாக விளங்குகிறது என்பர் உரையாசிரியர். விவிலியத்திலும் இயேசு பிரான் ஒருவரைச் சுட்டும் பொழுது உங்களால் சாதாரணமாக மதிப்பிடப் பெற்றவர் இன்று மூலைக்கல்லாக விளங்குகிறார் என்கின்றார்.

**பருத்தி பட்ட பன்னிரண்டும் படல்**

மாவலியிடம் பெருமான் இந்தப் பூமியை இரக்கின்றான். இந்தப் பூமி எத்தகையது? பருத்தி பட்ட பன்னிரண்டும் பட்டது என்ன பொருள்? பருத்தியானது மனிதர்க்குப் பயன்படும் ஆடையாகிக் கிழிவதற்குள் பன்னிரண்டு பாடுகள்படுகின்றதாம். பருத்தியைக் கொட்டையுடன் வாங்கி, பன்னி, சுருட்டி, நூலாக்கி, பாவோடு, நெய்தும், மடித்து, விற்று, தோய்த்து, உலர்த்தி, உடுத்தி, கிழிந்து எனஅவை பன்னிரண்டு பாடுகள் படுகின்றன அல்லவா?

**பழங்கிணறு கண்வாருதல்**

பழைய கிணற்றை ஊற்றுக்கண் கிளம்பத் தூர் வாருதல். செம்மைப்படுத்துதல், நம்மாழ்வார் பெருமாள் தமக்கு முன்பு செய்த உதவிகளை எல்லாம் பேசுவது பழங்கிணறு வாருதல் என்று சொல்லி, அவன் தன்னையே தமக்குத் தந்த சிறப்பினைக் கொண்டாடுகின்றார்.

**பள்ளமடை**

பள்ளத்தை நோக்கி வெள்ளம் செல்வது போல இயல்பான என்பது பொருள். குழந்தைகளைக் காணுந்தோறும் முதியவர்கள் வாரி அணைக்கத் துடிப்பது பள்ளமடையாகும்.

**அமுது செய்தல்**

சாப்பிட்டீர்களா ? என்று நாம் வினவுவதை தீவிர வைணவர்கள் இன்றைக்கும் 'அமுது செய்தாயிற்றா ? என்றே கேட்பர். ரசத்தைத் திருச்சாற்றமுது என்பர். பாயசத்தைத் திருக்கண்ணமுது என்றும், நெய்ப் பொங்கலை 'அக்காரவடிசில்' (அக்காரம்–வெல்லம், அடிசில்–சோறு) என்றும் கூறுவர். இஃது உரையாசிரியர்கள் தொடங்கி வைத்த வழக்கமே.

**அலகலகாக**

ஒன்றோடு ஒன்று கூடாமல் இருத்தல் கண்ணிற்குழல் சுருண்டு வெடித்து அலகலகாய் இருந்தது என்பர். இந்தச் சொல் இந்தியிலும் இதே பொருளில் (தனித்தனியாய்) அலக் அலக் என்று குறிப்பிடப்பெறுகின்றது.

**ஆழங்காற் படுகை**

பெரும் ஈடுபாடு என்பது பொருள். அவர் கம்பராமாயணத்தில் 'ஆழங்காற்பட்டவர்' என்கிறோம்.

**ஈரக்கையாலே தடவுதல்**

பரிவு காட்டுதல்,

**கடு நடையிட்டுச் செல்லல்**

விரைந்து செல்லல் காலப் போக்கில் இத்தொடர் 'பொடிநடையாகப் போய்வா' என்றாகி விட்டது.

**பசுகு பசுகு என்றிருத்தல்**

பசுமையாக இருத்தல் செல்வந்தர் இல்லங்களில் நாய்களும் பசுகு பசுகு என்றிருக்கும். இதுவே இன்று பொசு பொசு , புசு புசு என்றிருக்கிறது என்றாயிற்று.

இங்ஙனம் எண்ணற்ற மரபுத் தொடர்கள் வைணவ உரையாசிரியர்களால் அவர்தம் உரைகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. தமிழக வரலாறும், சொல்லாய்வும் அறிய விரும்பும்அதில் ஆய்வு புரிய விழையும் தமிழன்பர்கட்கு அவை பெருவிருந்து என்பதில் ஐயமில்லை.



புதியதாக துவக்கப்பட்ட கரூர் மாவட்ட இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் அலுவலகத்தை கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.வெங்கடேஷ் அவர்கள் 15-04-2008 அன்று குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார் .

# இராஜகோலாகலச் சிங்கபெருமாள்




சென்னை – திருச்சி நெடுஞ்சாலையில் சென்னையிலிருந்து ஏறத்தாழ 45 கி.மீ தொலைவில் சாலையோரத்தில், சாலையின் கிழக்கில் அழகிய சிறுகுன்றையும் அதில் ஆலயத்தையும் காண்கிறோம். இந்த் மலை சிவப்பு நிறத்தில் விளங்கியதால் செங்குன்றம் என வழங்கப்பட்டது. வடமொழியில் படலாத்திரி என்பர். பாடலாம் என்ற சொல்லுக்குச் சிவப்பு என்பது பொருள். இந்த மலையில் பல்லவர் கால குடைவரைக் கோயிலில் பிரகலாதவரதன் என்னும் நரசிம்மர் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றார். அவர் பெயரால் இந்த குன்றைச் சூழ அமைந்த ஊர் சிங்கபெருமாள் கோயில் என்று அழைக்கப்படுகிறது.

இத்தலம் புராணப் பெருமைகள் பலவற்றைக் கொண்டதாகும். பிரம்மாண்ட புராணத்தில் இந்தத் தலத்தைப் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளதாகக் கூறுகின்றனர்.

பெருமாள் இரண்யனைக் கொன்றழிக்க நரசிம்ம அவதாரம் செய்த காலத்தில் இந்த இடம் பெரிய காடாக இருந்ததாம். அந்தக் காட்டின் நடுவே இருந்த இந்தக் குன்றில் ஜாபாலி என்ற முனிவர் தவம் செய்து கொண்டிருந்தார். அவருடைய பிரார்த்தனையை நிறைவேற்றப் பெருமாள் நரசிம்ம அவதாரத்தின் நோக்கம் முடிந்தவுடன் இங்கே வந்து அவருக்குக் காட்சியளித்தார் என்று புராணம் கூறுகிறது. அவர் மூன்று கண்களுடன் உக்ரம் குறைந்து பெரிய சிம்மாசனத்தில் அமர்ந்து இராஜதர்ப்பார் நடத்தும் கோலாகல நரசிம்மராகக் காட்சி கொடுத்து அருள் பாலித்தார் என்று கூறுகின்றனர். இவரை ராஜகோலாகல நரசிம்மர் என்று கொண்டாடுகின்றனர்.

நெடுநாட்கள் சென்ற பின் பல்லவமன்னர்கள் பெருமாள் சம்பந்தமுடைய பெரியபாறையில் கருவறையொன்றைக் குடைவித்து அதில் நரசிம்மரை அமைத்துள்ளனர். இந்த நரசிம்மர் தலையில் கிரீடம் அணிந்துள்ளார். பிடரிமயிர்கள் சிலிர்த்துக் கொண்டுள்ளன. அழகிய சிங்க முகத்துடன் விளங்குகிறார். உயர்ந்த ஆசனத்தில் வலது காலை தொங்கவிட்டு இடது காலை மடித்து அமர்ந்துள்ளார். மேற்கரங்களில் சங்கு சக்கரங்கள் உள்ளன. வலது முன் கை அபயம் காட்ட இடது முன் கையை இராஜகம்பீரத்துடன் தொடைமீது வைத்துள்ளார். சாளிக்கிராம மாலை, சகஸ்ர நாம காசுமாலை ஆகியவற்றுடன் கவசம் அணிந்துள்ளார், மார்பில் ஸ்ரீவத்சத்தில் மகாலட்சுமி அமர்ந்துள்ளாள்.

பெருமாள் குன்றின் பாறையிலேயே அமைந்திருப்பதால் வலம் வருபவர்கள் குன்றையும் சேர்த்தே சுற்றி வர வேண்டும். தாயார் சந்நிதி தனியே உள்ளது. அதில் அகோபிலவல்லி என்ற பெயருடன் தாயார் வீற்றிருக்கிறாள்.

மூலவருக்கு முன்பாக ஸ்ரீதேவி பூதேவி உபய நாச்சிமார்களுடன் உற்சவ மூர்த்தி எழுந்தருளியுள்ளார். இவருக்குப் பிரகலாத




வரதர் என்பது சிறப்புப் பெயராகும். இதற்குப் பிரகலாத ஆழ்வாருக்கு அருள் செய்தார் என்பது பொருள். மூலவர் அமைந்துள்ள பாறைமீது அழகிய விமானம் கட்டப்பட்டுள்ளது. அதற்கு பிரணவ கோடி விமானம் என்பது பெயர். தீர்த்தம் சுத்த புஷ்கரணி தலவிருட்சம் பாரிஜாதம்.

பின்னாளில் கோயில் நன்கு வளர்த்திக் கட்டப்பட்டு தாயார் சந்நிதி, ஆண்டாள் சந்நிதி, லட்சுமி நரசிம்மன் சந்நிதி ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. கருடன் சந்நிதி கருவறைக்கு நேராக உள்ளது. ஆழ்வார்கள் ஆச்சாரியார்கள் சந்நிதிகளும் உள்ளன. கோயிலுக்கு முன்புறம் பெரிய அழகிய மண்டபம் உள்ளது. சந்நிதித் தெருவின் கிழக்குக் கோடியில் சிறிய திருவடியான ஆஞ்சநேயசுமாமி ஆலயம் மேற்கு நோக்கி அமைந்துள்ளது.

வைகானஸ ஆகமத்தின் படி பூசைகள் நடத்தப்படுகின்றன.

நரசிம்மர் அவதாரம் செய்தது பிரதோஷ காலத்தில் என்பதால் இங்கு பிரதோஷ காலத்தில் சிறப்புத் திருமஞ்சனம் நடைபெறுகிறது. சிறந்த பிரார்த்தனைத் தலமாக இந்த ஆலயம் திகழ்கிறது. திருமணம் ஆகாதவர்கள் வாரத்திற்கு ஒரு நாள் வீதம் ஐந்து வாரங்கள் பெருமானின் மூன்று கண்களையும் தரிசனம் செய்து ஒன்பது முறை இந்த மலையை வலம் வந்தால் விரைவில் திருமணமாகும். நல்ல சம்பந்தம் கிடைத்து மகிழ்ச்சி உண்டாகும். பிள்ளைப் பேறு அற்றவர்கள் பெருமாளையும் தாயாரையும் சேவித்து கிரிவலம் வந்து தொட்டில் வாங்கி அழிஞ்சல் மரத்தில் கட்டினால் குழந்தைப் பேறு கிடைக்கும். வரமருளும் மூர்த்தியான பிரகலாத வரதர் அருளால் உயர்ந்த பதவிகள் உண்டாகும்.

இக்கோயிலில் பல அருமையான சிற்பங்கள் உள்ளன.

இக்கோயிலுக்கென தனியே ஆழ்வார்களின் அருளிச்செயல் இல்லை என்றாலும் திருமங்கையாழ்வார் சிங்கவேள் குன்றத்தில் அருளிச்செய்த பெரிய திருமொழியில் முதல் பத்தில் ஏழாம் திருமொழியாக இடம் பெற்றுள்ள பாசுரங்கள் இங்கே தினமும் அனுசந்தானம் செய்து சேவிக்கப்படுகின்றன.

**கோயில் தொலை பேசி எண்: 044 27464325**

மகாலட்சுமி அகலாதிருந்து அலங்கரிக்கும் திருமார்பை உடையவனும், ப்ரகலாதனின் மனதை விட்டு அகலாதவனும் ஆகிய நரசிம்மப் பெருமாள் என்னை அகலாதிருந்து அஞ்ஞானத்தை நீக்கி அருள் புரிந்து காக்க வேண்டுமென்று துதிக்கிறேன். சிங்கவேள் என்னை செல்வமுடையவனாகச் செய்யட்டும்.



# மோனமென்பது ஞான வரம்பு

(க.சுகுமாரன், மன்னார்குடி)

'**மோ**னமென்பது ஞான வரம்பு' என்ற வாக்கியம் ஔவைப் பிராட்டியார் அருளியது. அதாவது மௌனம் என்பது ஞானத்தின் எல்லை அல்லது மௌனம் என்பது ஞானத்தை அடையும் வழி என்று பொருள், மௌனம் அல்லது மோனம் என்றால் சும்மா இருப்பது என்று பொருள். சத்துவம், இராஜசு, தமசு ஆகிய முக்குணங்களில் இது சத்துவ குணத்தைச் சேர்ந்தது. சாதாரணமாக ஒருவன் வாய் பேசாமலிருந்தால் அவன் மௌனமாய் இருக்கிறான் என்று கூறுவது உலக வழக்கம். ஆனால் பேசாமல் இருந்தால் மட்டும் ஞானம் கிட்டி விடுமா? அப்படியாயின் ஊமைகளெல்லாம் ஞானிகளாக வேண்டும் அன்றோ, சன்னியாசிகள், துறவிகள் இவர்களில் சிலர் வாயால் பேசாமல் அவசியமாக வெளியிட வேண்டிய எண்ணங்களை எழுதிக் காட்டுவதுண்டு. இத்தகையோர் ஒரு காரிய சித்திக்காகக் குறித்த காலம் வரையில் மௌன விரதத்தைக் கடைப் பிடிப்பவர்கள். அதனால் பிறர் அதிகமாகப் பேசுவதற்கு இடமில்லாமல் போகிறபடியால், அவர்களது மனதை ஒருநிலைப்படுத்துவதற்கு சாத்தியமாகிறது. ஆயினும் இவைகள் பூரண மௌனமாகா.

கீழ்க்கண்ட மூன்று வித மௌனங்கள் அடங்கியதே பூரண மௌனம். அதுவே ஞானிகள் அடையும் மௌனம்.

1) வாக்கு மௌனம் : வாய் திறந்து எதையும் பேசாதிருத்தல்

2) காஷ்ட மௌனம் : உடல் உறுப்புகளால் ஒரு வேலையும் செய்யாதிருத்தல்

3) மனோ மௌனம் : மனதால் எதையும் சிந்திக்காதிருத்தல்

ஒரு காரியம் நடக்க வேண்டுமாயின் மனம், இந்திரியம், புலன் மூன்றும் ஒன்று சேர்ந்தே அது நடக்க வேண்டும். இந்த மூன்றில் மனமே முதலில் ஒன்றை நினைக்க வேண்டும். பிறகு அது இந்திரியத்தின் உதவி கொண்டு புலன் வழியாய் வெளி விஷயங்களை உணர்ந்து கருமேந்திரியங்களால் செயலைச் செய்கிறது. மனம் நினைக்கா விட்டால் ஒரு காரியமும் நடக்காது. ஆகையால் மனோ மௌனமே ஞானத்திற்கு முக்கிய சாதனமாகும். மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களாலும் நாம் கருமங்களைச் செய்கிறோம். மனம் அடங்கி விட்டால் கன்மமே ஒழிந்து விடும். மனம் சலனமற்ற போது சத்துவகுணம் மாத்திரம் இருக்கிறது. மனதின் உருவ நிலையே அதன் இரஜோ தமோ குணங்களாகும். அருவ நிலையே அதன் சத்துவ குணமாம். மனோலயம் அடைந்த ஞானிகள் இறை அர்ப்பணமாக கனவு காண்பது போல் காரியங்களைச் செய்தாலும் அவர்களுக்கு கருமம் உண்டாகாது.

மனம் ஒடுங்கினால் ஆன்மா அந்தச் சுத்த சத்துவவிர்த்தியால் தன்னைத் தானறிகிறது. அதாவது ஞானத்தை அடைகிறது. ஆதலால் மோனமென்பது ஞான வரம்பு என்று கூறப்பட்டது. மனம் உள்ளும் வெளியுமாகிய இரண்டு வழிகளில் தொழில் செய்கிறது. வெளியில் இந்திரிய வாயிலாகப் புறம் பெயர்ந்து விஷயங்களில் பிரவேசிக்கிறது. உள்ளே மனோராச்சியம் செய்கிறது.

ஒவ்வொரு சமயம் நாம் வெளி விஷயங்களைக் கவனிப்பதை விட்டு மனோராச்சியம் செய்யாமல் (அதாவது மனதில் ஒன்று நினைக்காமல்) சற்று நேரம் சும்மா இருக்கிறோம். அப்போது அருகிலுள்ளோர் பேசுவதும் நமக்குக் கேட்காது. எதிரில் ஒருவர் செல்வதும் நமக்குத் தெரியாது. ஏனெனில்

மனம் எந்த இந்திரியத்தோடும் சம்பந்தப்படாமலும், எதையும் சிந்திக்காமலும் இருக்கிறது. அதுவே மௌனமாகிய நிலை.

ஒரு குளத்தில் நீர் கலங்கி அலைகள் வீசிக் கொண்டிருக்கையில் குளத்தின் அடியில் என்ன இருக்கிறதென்று தெரியாது, அத்தகைய குளத்தைப் போன்றது சலனத்தோடு கூடிய மனம். அலைகளின்றி தெளிவான நீரையுடைய குளத்தின் அடியில் இருக்கும் பொருள்கள் தெரியும். சலனமற்று ஒரே நிலையில் நிற்கும் மனம் அதாவது சத்துவகுணத்தில் நின்ற மனம், அலையற்ற குளம் போன்றது. அப்போது அதன் அடியில் உள்ளது தோன்றும். மனதின் அடிப்பாகமே அது உதிக்கும் இடம். ஆகையால் அங்கு நோக்க அதாவது மனம் எங்கிருந்து உதிக்கிறதென்று நோக்க ஆன்ம தரிசனம் உதயமாகும். ஏனெனில் ஆன்மாவினின்றே மனம் உதிக்கிறது.

தாயுமானவர் மனதை நோக்கி நின் சன்ம தேயத்தில் நீ செல்லாது வேண்டும் என்றார். அதாவது மனமே நீ எங்கிருந்து முளைத்தாயோ அங்கு போய்ச் சேர் என்றார். இன்னும் அம்மகானே

'சும்மா விருக்கச் சுகம் உதயமாகுமே

யிம்மாயா மோகமினி யேனடா தம்மறிவின்

சுட்டாலேயாகுமோ சொல்லவேண்டாங் கன்ம

நிட்டா சிறு பிள்ளாய் நீ' என்றும்

'சும்மா விருக்கச் சுகஞ்சுக மென்று சுருதியெல்லா

மம்மா நிரந்தரஞ் சொல்லவுங் கேட்டு மறிவின்றியே

பெம்மான் மௌனி மொழியையுந் தப்பியென் பேதைமையால்

வெம்மாயக் காட்டில் அலைந்தேன் அந்தோ வென் விதிவசமே' என்றும்,

'சும்மா விருப்பதுவே சுட்டற்ற பூரணமென்

றெம்ம லறிதற் கெளிதோ பராபரமே' என்றும்

என அருளியதும்,

குமரக் கடவுளின் திருவருள் பெற்றுத் திருப்புகழ்

பாடியருளிய அருணகிரிநாதர் கந்தரலங்காரத்தில்'

'சும்மா விரு சொல் லற வென்றலுமே

யம்மா பொருளொன் றுமறிந் திலனே

என்று அருளியுள்ளதும் ஈண்டு சிந்தித்தற்பாலன, இந்த மூவிதங்களும் சேர்ந்த மவுனமே சுத்த மௌனம் எனப்படும்.

'சித்த மவுனஞ் செயல்வாக் கெலா மவுனஞ்


சுத்த மவுன மென்பாற் றோன்றிற் பராபரமே'

– தாயுமானவர்

'என்னிடம் சுத்த மவுனம் உதித்தால் என் சித்தம், செய்கை, வாக்கு யாவும் மௌனமாகும், அதாவது மனம், வாக்கு, காயம் மூன்றும் மௌனமாம்' என்பது பொருள்.

இந்த மோன நிலையை அடைவதற்கு ஆசை ஒழிய வேண்டும். எல்லாரும் ஏக காலத்தில் இதை அடைய முடியாது. மனம் ஒரே சிந்தனையில் நிற்பதே கஷ்டம். சதா ஒரு சிந்தனை விட்டு ஒரு சிந்தனையில் குதித்து அலைந்து கொண்டே இருப்பது தான் அதன் சுபாவம். வேதத்தில் மனதைக் குரங்கிற்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. எத்தகைய குரங்கு எனின் குரங்கு கள் குடித்து விட்டால் அதிக சேட்டை செய்யுமன்றோ. அதோடு அது காரமான இஞ்சியை மென்று விட்டால் இன்னும் அதிக சேட்டை செய்யும், அதோடு அதைத் தேளும் கொட்டி விட்டாலோ பின்னும் சொல்ல வேண்டியதில்லை. அதுவும் போதாதென்று ஒரு பேயும் அதைப் பிடித்துக் கொண்டால் அக்குரங்கு எப்படி இருக்கும்? அத்தகைய குரங்கிற்குச் சமமாக மனதை ஒப்பிட்டிருக்கிறது.

ஆகையால் முதலாவது ஆசையைக் கொஞ்சம் கொஞ்சமாக அடக்க வேண்டும். மனம் இச்சாசொரூபம். இச்சையை ஒழித்தால் மனம் அடங்கும். அதோடு மனதை முதலில் குறித்த ஒரு சிந்தனையிலேயே நிறுத்தப் பழக வேண்டும். அதற்கே சகுணோபாசனை வைக்கப்பட்டிருக்கிறது, உலக போகத்திலிருக்கும் இச்சையை உபாசனா




மூர்த்தியினிடம் செலுத்தி (அதுவே பக்தி என்பது) மனதை அங்கு நிறுத்திப் பழக வேண்டும். அதில் திடப்பட்டு அனுபவம் முதிர, முதிர மனவொடுக்கம் சித்திக்கும், இது மிக்க கஷ்டமானதே ஆயினும் சாத்தியமானதே. சும்மா இருப்பதுவே மிக்க கஷ்டம். இது சோம்பலல்ல. இதில் தான் மனம் தன் பூரண சுறுசுறுப்போடு வேலை செய்கிறது. மனதை அதன் இச்சைப்படி விட்டு விட்டு அதன்பின் அலைவது கஷ்டமல்ல. ஒரு குதிரையை அதன் மனம் போனபடி முரட்டுத்தனமாய் மேடு பள்ளம் பாராது பாய்ந்து ஓடும்படி விட்டு விடுவது கெட்டிக்காரத்தனமல்ல. கஷ்டமும் அல்ல, அதன் கடிவாள வாரை இழுத்துப் பிடித்து அதை அடக்கி நிறுத்துவதே கஷ்டம். அப்படி செய்பவனே சாமார்த்தியவான். மனதை அடக்கி ஆளக் கற்றவனே உண்மையான வீரன். அவனே புருடன் எனப்படுவான். நம் முன்னோர் அச்சக்தியாலேயே திரிகால ஞானிகளாய் அபூர்வ காரியங்களைச் செய்தார்கள். இத்தெய்வீக சாத்திரம் நம் புண்ணிய பூமியிலேயே அநாதியாய் உள்ளது. ஆகையால் நாம் ஒவ்வொருவரும் இதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஏனெனில் மனிதன் அடையத் தக்க பேரின்பப் பேற்றை அளிக்கவல்லது இம்மார்க்கம் ஒன்றே. மனதைஅடக்குவோம். மட்டற்ற மகிழ்ச்சி பெறுவோம்.

# மலைமீது சாளக்கிராம ராமர்

*மலைமீது அமைந்துள்ள ராமர் திருக்கோயில் என்ற சிறப்புடன் * மூலவராக ராமர் சீதை சாளக்கிராமத்தில் காட்சி தரும் தலம், * திருமால், கொற்றவை, சிவன் என மூன்று சமயத்தவரின் ஆலயங்கள் கொண்டுள்ள ஊர் * காகாசுரன், மஹிஷாசுரன் வாழ்ந்து வதமான தலம் * கார்கேய முனிவர் தவம் இருந்த பூமி * நான்கு திசைக்கும் காவல் தெய்வங்கள் கொண்ட ஊர், எனப் பல்வேறு சிறப்புகளை கொண்டு விளங்கும் ஊராக திகழ்வது. சென்னைக்கு மேற்கில் காரனோடைக்கு அருகே அமைந்துள்ள எருமை வெட்டிப்பாளையம்



### தொன்மைச் சிறப்பு

திருமால், கொற்றவை, சிவன் என மூன்று சமயத்தவர்க்கும் ஏற்ற வகையில் மலை மீது ராமர் ஆலயம். மற்றொரு மலை மீது அங்காள பரமேஸ்வரி ஆலயம், இரண்டிற்கும் இடையே வரமுக்தீஸ்வரர் ஆலயம் என முப்பெரும் பழம் பெருமைவாய்ந்த கோயில்களைக் கொண்டு விளங்குவது திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்தில் உள்ள எருமை வெட்டிப்பாளையம் எனும் கிராமம்.

இப்பகுதி சோழமன்னன் மற்றும் விஜயநகரப்பேரரசனான கிருஷ்ண தேவராயன் காலத்தில் சிறப்புடன் விளங்கியதை வரலாறுகள் எடுத்துக் காட்டுகின்றன.

ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து, விக்ரம சோழ வளநாட்டு, புழல் கோட்டத்திலுள்ள ஊராக திகழ்ந்ததை ஒரு கல்வெட்டு (கிபி 1507) குறிப்பிடுகின்றது. இதன்மூலம் இங்குள்ள ரகுநாதப் பெருமாள் ஆலய வழிபாட்டிற்கு சில வரிகள் ஒதுக்கப்பட்ட செய்தியும் தெரியவருகிறது.

ஊரின் நான்கு திசைகளிலும் நான்கு காவல் தெய்வங்கள் ஊரைக் காத்து நிற்கின்றன. ஊரின் அருகே குசஸ்தலை ஆறு ஓடுகின்றது. இந்த அமைப்புகளுக்குப் புராண கதைகளும் உண்டு.

### காகா அசுரன்

இங்குள்ள மலையின் மீது இராமன் தன் துணைவியான சீதையின் மடியில் கண் அயர்ந்தான். அப்போது இந்திரனின் புத்திரனான ஜயந்தன் காமமோகத்தில் மதி இழந்து, காக உருவம் எடுத்து வந்து, ஜானகியின் மார்பில் தன் அலகினால், கொத்தினான். அதை அறிந்த இராமன் ஒரு தருப்பையை கிள்ளி அஸ்த்திரமாக ஏவினான். அது உக்ரமான ஆயுதமாக மாறி காகத்தின் வடிவில் திகழ்ந்தவனின் ஒரு கண்ணைக் குத்தி அழித்தது. தருப்பையை வடமொழியில் குசம் என்பார்கள். அக்குசம் வளைந்து, வளைந்து துரத்திய பாதையே பின்னாளில் நீர் நிரம்பிய குசஸ்தலை ஆறு ஆகியது என்பர். அது இங்கே உத்திரவாகினியாக ஓடுகிறது.

### சாளக்கிராம வடிவம்

இந்த வரலாற்றை உணர்ந்த சிற்பி ஒருவனால் உருவாக்கப்பட்டதே இன்று நாம் சாளக்கிராமத்தில் தரிசிக்கும் ராமர், சீதை திருவுருவங்கள். ஒரே சாளக்கிராமக்கல், சிற்பியின் கைவண்ணத்தால் அழகிய வடிவங்களாக இன்று மின்னுகின்றன.



இராமனின் மடியில் சீதை அழகுற அமர்ந்துள்ளார். இவரை ரகுநாதன் என்று அழைக்கின்றனர்.

சீதாராமனின் பரந்த தோள் புஜபல பராக்ரமத்தை வெளிப்படுத்துகின்றது.

## மஹிஷாசுரன்

இதே போல, இன்னொரு வரலாறும் கூறப்படுகிறது. சீதையும் இராமனும் குசஸ்தலை ஆற்றில் நீராடினர். அப்போது அப்பகுதியில் வாழ்ந்து வந்த மஹிஷாசுரன் எனும் அசுரன், சீதையின் மீது ஆசை கொண்டு அவளது திருமேனியைத் தொட வந்தான்.

இதனை உணர்ந்த ராமபிரான் எருமை வடிவம் கொண்ட மஹிஷாசுரனை வதம் செய்யும் நோக்கத்தில் தர்ப்பைகளை கிள்ளி அவற்றை ஏவினார். அவை பொன்னி, மூலகாலம்மை, கருகாத்தாள், அங்காளபரமேஸ்வரி என்ற நான்கு பெண் தெய்வங்களாக மாறின. இவற்றில் முன்சொன்ன மூவரும் அங்காளம்மனுக்கு உதவி செய்ய அவள் மஹிஷாசுரனை வதம் செய்தாள்.

மஹிஷனை மர்த்தனம் செய்ததால் இது எருமை வெட்டிப்பாளையம் என்று அழைக்கப்படுகின்றது. வடமொழியில் மகிஷமர்த்தனபுரம் என்பர்.

## கார்கேய முனிவர்

இவ்வூரின் குன்றின் மீது கார்கேய முனிவர் பல ஆண்டுகளாக ஆசிரமம் அமைக்க நாராயணனை வேண்டிக் கடும் தவம் செய்து வந்தார். தவத்தின் பயனாய் சாகேத நகரம் செல்லும் வழியில் இராமபிரான் கார்கேய முனிவருக்கு காட்சி தந்தார். மேலும் குன்றில் முனிவரின் விருப்பப்படியே, ஸ்ரீமன் நாராயணன் தனது விசுவரூபத்தை காட்டி அருள்பாலித்தார். அப்போது என்ன வரம் வேண்டும் என்று இறைவன் கேட்க, அதற்கு முனிவர் இத்தலத்திலேயே தாங்கள் ராமரும் சீதையுமாக எழுந்தருளி இப்பூவுலக மக்களைக் காத்தருள வேண்டும் என்று வேண்டினார்.

அதன்படியே வரம் தந்த இறைவன் சாகேத நகரம் சென்று திரும்பி வந்து இக்குன்றில் எழுந்தருளி அருள்பாலித்து வருகிறார் என்கின்றனர்.

## ஆலய அமைப்பு

குசஸ்தலை ஆற்றின் கரையோரம் எழிலான குன்று அமைந்துள்ளது. அதன் உச்சிக்குச் செல்ல கல்லாலான படிக்கட்டுக்கள் உள்ளன. குன்றின் மீது எழிலான கோதண்டராமர் திருக்கோயில் அமைந்துள்ளது.

மூலவராக ராமர், சீதாப்பிராட்டியினைத் தன் இடது மடியின் மீது இருத்திக் கொண்டு, அவளை அணைத்த கோலத்தில் எழிலுடன் காட்சி தருகிறார். வேறெங்கும் காணப்படாத மூன்று அடி உயர சாளக்கிராமத்தில் இது உருவாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க அம்சம் ஆகும். இராமனுக்கு அருகில் இலஷ்மணன் கையில் வில் ஏந்தி நிற்கின்றார். இது உலோகச் சிலை போல அமைந்துள்ளது. அதனருகே ஆஞ்சநேயர் பவ்யமாக காட்சி தருகிறார். மேலும் இவ்வாலயத்தில் ஸ்ரீமன் நாராயணனுக்கு சிறிய சந்நிதியும், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் உடையவர் சேனை முதலியார் ஆகிய நால்வர் திருவுருவங்களும் உள்ளன. இவ்வாயத்தின் மேற்புறத்தில் இருந்து வரும் குசஸ்தலை ஆறும் அதைச் சுற்றி அமைந்த இயற்கையின் எழிலும் நம் கண்களுக்கு விருந்தாக அமைகின்றன.

### விழாக்கள்

முன்னாளில் பத்து நாட்கள் பிரம்மோற்சவம் வெகு சிறப்பாக நடந்து வந்துள்ளது. அச்சமயம் திருவள்ளூர் ஸ்ரீ வீரராகவப்பெருமாள் இங்கே எழுந்தருள்வது வழக்கமாக இருந்துள்ளது.

### உற்சவர்

இக்கோவிலிலுள்ள உற்சவர் ராமர் செப்புத் திருமேனியில் வில்லேந்தும் விரல்களில் நளினம், இடையில் மரவுரி, சிரச் சக்கரம், சுருண்ட முடிக்கற்றைகளாய் தோளில் வழியும் சடை என இச்சிலையில் சிற்பியின் சிறந்த கலை வேலைப்பாடு வெளிப்படுகிறது.

### தரிசன நேரம்

இக்கோயில் காலை 8.30 மணி முதல் 9.30 வரை மட்டுமே திறந்திருக்கும்.

### அமைவிடம்

இச்சிறப்புமிகு கோதண்ட ராமர் ஆலயம் திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டத்தில் அமைந்துள்ளது. சென்னை கோயம்பேட்டிலிருந்து மேற்கே சுமார் 37 கி.மீ. தொலைவில் எருமை வெட்டிப்பாளையம் அமைந்துள்ளது. பேருந்து வழியாக வரவிரும்புவோர் கோயம்பேட்டில் 57 என்னும் பேருந்து மூலமாக காரனோடை வரவேண்டும். பின் அங்கிருந்து எருமை வெட்டிப்பாளையம் செல்ல வேண்டும். வாகன வசதி உள்ளவர்கள் சென்னை – கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலையில் (திருப்பதி செல்லும் வழியில்) காரனோடை மேம்பாலத்தில் கீழே மேற்கு நோக்கி செல்லும் சாலை வழியே ஏழு கிலோ மீட்டர் பயணம் செய்தால் இவ்வூரை சென்று அடையலாம்.

### குடமுழுக்கு விழா

இச்சிறப்பு மிகு இராமர் ஆலயத்திற்கு நூறு ஆண்டுகளுக்கு பின் கடந்த (2007) மார்ச் மாதம் 25–ம் தேதி குடமுழுக்கு விழா நடைபெற்றது. அபூர்வ ஆலயத்தை தரிசிக்க விரும்புவோர் அவசியம் செல்ல வேண்டிய தலம் மட்டுமல்ல, திருப்பணிக்கு உதவி செய்ய வேண்டிய தலமும் இதுவாகும்.

படங்கள், கட்டுரை

பனையபுரம் அதியமான்



# மக்கள் வெள்ளத்தில் தியாகேசப் பெருமான்




நிறுவனம் தேரின் அச்சு மற்றும் சக்கரங்களை நவீனப்படுத்தி தேர் சுலபமாக வீதியில் பவனி வரும் அளவிற்கு செய்துள்ளது. கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருக்கும்.

ஆடி வரும் தேரழகு – அசைந்து வரும் பேரழகு நான்கு வீதிகளிலும் கூடி வரும் மக்களின் களிப்பழகு என்றுமே நிலைத்திருக்கும்

ஆழித்தேரோட்ட திருவிழா முடிந்த பின்னர் தியாகராஜ சுவாமி பக்தர்களுக்கு அருளும் பக்த காட்சியும், இதைத் தொடர்ந்து

இத்தகைய பெருமைகள் வாய்ந்த மிகத் தொன்மையான ஆழித்தேரோட்ட விழா, ரூ.30 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே ஆர். பெரியகருப்பன் அவர்கள், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் ஆட்சித்தலைவர் திரு எம்.சச்திரசேகர் அவர்கள், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தென்காசி சு.ஜவஹர் அவர்க




இவ்வுலகத்து உயிர்கள் மேன்மையடைந்து உய்வதன் பொருட்டு இறைவன் வீற்றிருந்து அருள் வழங்கும் தலங்களுள் தலையானது, பாடல் பெற்ற தலங்களுள் மிக அதிகமான பாடல்களைப் பெற்றது. சைவ சமயத்திற்கே தலைமைப் பீடமாய் விளங்குவது, பிறந்தாலும், பெயர் சொன்னாலும் முக்தியளிப்பது, பஞ்சபூத தலங்களுள் பூமிக்குரிய தலமாக விளங்குவது, நளனும், சனீஸ்வர பகவானும் வழிபட்ட ஒரே தலமாகவும், சர்வதோஷ பரிகாரத் தலமாகவும், மூலாதார தலமாகவும் விளங்குவது, சப்தவிடங்கர் தலங்களுள் முதன்மையானது, சக்தி பீடங்களுள் ஞானசக்தி பீடமானது திருவாரூர் திருத்தலமாகும். பன்னிரு திருமுறைகளிலும் பாடப் பெற்ற பெரும் சிறப்பினை உடையது திருவாரூர். சைவ சமய மரபில் பெரிய கோயில் என்றால் அது திருவாரூரையே குறிக்கும்.

இத்திருக்கோயிலின் தேரினை ஆழித்தேர் என நாவுக்கரசரும், தேராரும் திருவீதி திருவாரூர் என சேக்கிழாரும் பாடுகின்றனர். திருவாரூரின் தேரோட்டத் திருவிழாவினை திருஞானசம்பந்தரும், நாவுக்கரசரும், இவ்வூரில் வந்து தங்கி முன்னின்று அன்றுபோல் இன்றும் நடத்துவதாகவும், ஆழித்தேர் திருவிழாவை காண இந்திரன் முதலான விண்ணவரும் வருவதாகவும் ஐதீகம்.

ஆழித்தேர் நன்கு அலங்கரிக்கப்பட்டு காட்சியளிக்கிறது. இதன் உயரம் 96 அடி. தேரில் நான்கு இரும்பு சக்கரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 2 இரும்பு அச்சு அதில் பொருத்தப்பட்டுள்ளது. தேரில் ஹைட்ராலிக் பிரேக் அமைக்கப்பட்டுள்ளது. தேரில் 4 குதிரை பொம்மைகளும், யாளி ஒன்றும் பிரத்யேகமாக அமைக்கப்பட்டு பிரம்மா சாரதியாக தேரோட்டுவது போல் அமைக்கப்பட்டுள்ளது. திருச்சி பெல்

தேர் வடம் பிடித்த பின்னர் நான்கு வீதிகளிலும் தேரை திருப்பி அடுத்த வீதிக்கு கொண்டு செல்லும் போது தேர் திரும்புவது

இவ்வூரழகு என்று வர்ணிக்கின்ற அளவிற்கு ஆழித்தேர் அமைந்துள்ளது என்றே கூறலாம்.

மூன்று நாட்கள் கமலாலயம் திருக்குளத்தில் தெப்பத் திருவிழாவும் நடைபெறும்.

அமைக்கப்பட்டுள்ள அம்பாள் தேருடன் 04.05.2008 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு இந்து சமய உ.மதிவாணன் அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு ஆணையர் திரு. த.பிச்சாண்டி அவர்கள், திருவாரூர்மாவட்டட மற்றும் ஆன்றோர்களும், சான்றோர்களும், ஆன்மீகப் பெரியோர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# அருள்மிகு மாரியம்மன் - கரூர்



முசுகுந்தச் சக்கரவர்த்தி பரிபாலனம் செய்ததும், முடியுடை மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியர் ஆட்சி புரிந்த இடமும் கருவூர் ஆகும். கொங்கு நாட்டு ஏழு புண்ணியத் தலங்களில் கருவூர் முதன்மையானது. இது பிரம்மபுரம், ஆதிபுரம், கரபுரம், வஞ்சுளாரண்யம், வஞ்சி, கரூர் என்ற பெயர்களில் அழைக்கப்படும் தொன்மைச் சிறப்பு வாய்ந்தது. வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கரூர் நகரில் மிகவும் சக்தி வாய்ந்த இதயப் பகுதியில் தேர் வீதியில் அமைந்துள்ள திருக்கோயில் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் ஆகும். இது சுமார் 100 வருடங்களுக்கு முன்பு தாந்தோணி ஸ்ரீ மாரியம்மன் கோயிலிலிருந்து பிடி மண் எடுத்து வந்து நிறுவப்பட்டது. கிராம தேவதையாக காவல் தெய்வமாக அருள்பாலித்துவரும் கரூர் மாரியம்மன் சாதி, சமய, இன பாகுபாடின்றி அனைவரது மனதிலும் ஒவ்வொருவர் இல்லத்திலும், உள்ளத்திலும் அமர்ந்து அனுதினமும் காத்து வருகிறாள். மூர்த்தி சிறியதாக இருந்தாலும் இதன் கீர்த்தியானது தமிழகமெங்கும் பரவி திக்கெட்டும் புகழ் பெற்று வருகிறது. கரூர் நகரினை காக்கும் சக்திமிக்க அன்னை வீற்றிருக்கும் இத்தலம் சிறந்த பிரார்த்தனைக் கோயிலாகும். கரூர் மாநகரின் மையப் பகுதியில் அமர்ந்து அருளாட்சி நடத்திவரும் அம்மனை தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வணங்கி வரம் பெறுகின்றனர். அவள் வேண்டி நிற்கும் பக்தர்களுக்கு கேட்டபடியே அருளைத்தந்து குறைகளைப்போக்கி மகிழ்ச்சியை அளித்துவருகிறாள்.

1982ம் ஆண்டு இத்திருக்கோயில் திருப்ணி செய்யப்பட்டது. 30–3–1983ல் ராஜகோபுரம் புதியதாக அமைக்கப்பட்டு பல்வேறு திருப்பணிகளுடன் கும்பாபிஷேக விழா சிறப்புடன் நடைபெற்றது. 25 ஆண்டுகளுக்குப் பின்னர் கரூர் மக்களின் ஏகோபித்த எண்ணமாக கோயில் அருகே உள்ள ஸ்ரீ கல்யாண பசுபதீஸ்வரர் மண்டபம் 4–9–2006ல் அரசு ஆணையின்படி விலைக்கு வாங்கப்பட்டது. அறநிலையத்துறை உத்தரவின்படி கடந்த 13–9–2006ம் ஆண்டு திருப்பணி தொடங்கப்பட்டு மிகக் குறுகிய காலத்தில் உபயதாரர்கள், பக்தர்கள், பொதுமக்கள் முழு ஒத்துழைப்புடன் பிரமாண்டமான முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. புதிய மண்டபம், அர்த்த மண்டபம் ஆகியவை கல் திருப்பணி வேலைகளாகச் செய்யப்பட்டுள்ளன. கோயில் முழுவதும் கிரானைட் கற்கள் பதிக்கப்பட்டுள்ளது. மூலவர் விமானம், ராஜ கோபுரம் ஆகியன திருப்பணி செய்யப்பட்டு, புதியதாக நான்கு தங்கக் கலசங்கள் அமைக்கப்பட்டு, உபயதாரர்கள் சார்பில் தங்கத்தேர் செய்யப்பட்டும் மேலும் பல்வேறு திருப்பணிகள் சிறப்பாக நடத்தப்பட்டு ஸ்வர்ண



பந்தன கும்பாபிஷேகப் பெருவிழா 25–3–2007ல் நடைபெற்றது, இப்பெரு விழாவில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு கே. ஆர். பெரியகருப்பன், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள், அறநிலையத்துறை மற்றும் இதர அரசுதுறை உயர் அதிகாரிகள், முக்கிய பிரமுகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இத்திருக்கோயிலில் சித்திரைத் திங்கள் முதல் நாளில் சிறப்பு பூஜைகளும், சந்தன காப்பு அலங்காரமும் அம்மன் திருவீதி உலாவும் மிகவும் விமரிசையாக நடைபெறும். ஆடி வெள்ளி, தை வெள்ளி ஆகியவை மிக விசேஷமான திருவிழா நாட்களாகும். இந்நாட்களில் அம்மனை வழிபட ஆயிரக்கணக்கான அன்பர்கள் வருகின்றனர். ஆண்டுதோறும் ஆடி பதினெட்டாம் பெருக்கன்று விசேஷமாக காய்கனிகளில் சாகம்பரி தேவி அலங்காரம் சிறப்பாக செய்யப்படும். நவராத்திரி நாட்களில் நாள்தோறும் அம்மனுக்கு சக்தியின் பல்வேறு அம்சங்களான மலைமகள், அலைமகள், கலைமகள் அலங்காரங்கள் செய்யப்பட்டு சிறப்பு வழிபாடுகள் நடத்தப்படும். தீபாவளி திருநாளில் விசேஷ வழிபாடுகள் நடைபெறுகின்றன. கார்த்திகை, மார்கழி மாதங்களில் அய்யப்ப பக்தர்களால் விசேஷ வழிபாடு செய்யப்படும். தனுர்மாத வழிபாடும் நடைபெறும். அம்பாளை எண்ணி வழிபடுவோர் நெஞ்சங்களில் ஆயிரம் கண்ணுடையாளாகவும், பாயிரம் பண்ணுடையாளாகவும், நித்திய கல்யாணியாகவும், அன்னபூரணியாகவும், சாமுண்டீஸ்வரியாகவும் போற்றப்பட்டு தங்களது பிரார்த்தனைகள் நிறைவேறும்போது பெரும் சக்தி அம்சமாக வழிபாடு செய்யப்படுகிறது. மண்ணெல்லாம் திருநீறு அம்மா உன் கோயில் வாசலிலே என்கிற பாடலின்படி இத்திருக்கோயிலில் மண்ணே திருநீறாக வழங்கப்படுகிறது. அதை பக்தர்களால் மிகவும் புனிதமாகவும், தங்களுக்கு நோய்வாய்ப்படும் வேலைகளில் அருமருந்தாகவும் பயன்படுத்துகிறார்கள்.

வருடந்தோறும் சித்திரை கடைசி ஞாயிறு துவங்கி வைகாசி மாதம் 22 நாட்கள் பிரம்மாண்டமான, அனைவரையும் பிரமிக்கவைக்கும் விழா சிறப்பாக நடக்கிறது. இவ்விழாவின் தொடக்க நிகழ்ச்சியாக காப்பு கட்டும்நாள் கரூர் நகர எல்லையில் இருப்பவர்கள் கம்பம் விடும் நாளன்றும் கண்டிப்பாக இருந்து அம்மனை தரிசனம் பெறவேண்டும் என்பது தொன்றுதொட்டு வரும் மரபு ஆகும். பக்திப் பழமாய் பவனிவந்த பக்தி பாடகி அமரர் கே.பி. சுந்தராம்பாள் அம்மையார் ஒவ்வொரு ஆண்டும் அக்னி சட்டி கையில் ஏந்தி தனது நேர்த்திக்கடனை செலுத்தி வந்தது சிறப்பான நிகழ்ச்சியாகும். இவ்விழாவில் மாரிமழைக்குரிய தெய்வம் என்பதன் அடையாளமாக கோடைநாட்களில் சிறிதளவேனும் மழைவருவது ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் இறையருள் நிகழ்வாகும்.

இத்திருக்கோயிலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்களது நேர்த்திக்கடனை விழா நாட்களில் நிறைவேற்றுகின்றனர். இத்திருவிழாவில் பக்தர்கள் லட்சக்கணக்கில் திரண்டு வந்து அம்மனை வழிபடும் காட்சி அற்புதக் காட்சியாகும். பக்தர்கள் அக்னிசட்டி எடுத்தல், அலகு குத்துதல், பால்குடம் எடுத்தல், மாவிளக்கு ஏற்றுதல், கோயிலைச்சுற்றி அங்கப் பிரதட்சணம் செய்தல் என்று பல்வேறு பிரார்த்தனை நிகழ்ச்சிகளை நிறைவேற்றுவது வழக்கம்.

கரூர் மாரியம்மன் திருக்கோயிலில் விழாவில் நடப்படும் கம்பம் தனி சிறப்பு உடையது. அது வருடந்தோறும் சித்திரை கடைசி ஞாயிறன்று வேப்பமரத்தில் மூன்று கிளைகளை உடைய ஒரு பகுதியை எடுத்துவந்து அதிலிருக்கும் பட்டைகளை உரித்து வடிவமைத்து மஞ்சள் பூசி வேப்பிலை கொத்துகள் மூன்று புறமும் கட்டப்பட்டு அன்று மாலை ஆற்றிலிருந்து ஆராதனைகள் செய்து ஊர் வலமாக எடுத்து வர ஆலயத்தில் அருள்மிகு மாரியம்மன் எதிரில் பலிபீடத்தின் அருகில் கம்பம்

நடப்படும். இந்தக் கம்பத்தை ஸ்ரீ சுவாமியாக பக்தர்கள் கருதுகிறார்கள். ஸ்ரீ மாரியம்மன் சக்தியாக சக்திக்கரக கர்ப்பக்கிரகத்திலிருக்கும். இதனை உத்தேசித்தே ஸ்ரீ அம்மனும், ஸ்ரீசுவாமியும் இணைந்து எழுந்தருளி அருள்புரிவதாக கருதப்படுகிறது. இதனை குறிக்கும் வகையில் கம்பம் திருக்கோயிலில் இருக்கும் வரையில் அன்றாடம் மாலை சாயரட்சை பூஜையில் கம்பத்துடன் கோவிலின் உள்ளே அம்மனுடன் வைக்கப்பட்டுள்ள சக்தி கரகத்தினையும் உடன் வைத்து பூஜை செய்வார்கள். பக்தர்கள் தொடர்ந்து தினசரி மஞ்சள் நீரில் குளிர்வித்து வழிபடுவதால், இந்த கம்பம் மஞ்சள் நீர் கம்பம் என்றும் அழைக்கப்படுகிறது.



கம்பம் திருக்கோவிலில் நட்டப்பட்டதற்கு அடுத்த ஞாயிறு காப்பு கட்டுதலும் மறுநாள் தொடங்கி கம்பம் ஆற்றுக்கு அனுப்பும் நாள் வரையிலும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் அதிகாலை 3 மணியிலிருந்து ஈர ஆடையுடன் மஞ்சள் நீருடன் வேப்பிலை எடுத்து வந்து கம்பத்துக்கு மஞ்சள் நீர் ஊற்றிப் பிராத்தனை செலுத்துவார்கள். கம்பம் நடப்பெற்று 18–ஆம் நாள் புதன்கிழமை மாலை கம்பத்திற்குத் தயிர்சாதம் படையலும், சிறப்பு பூஜைகளும் செய்து கம்பம் ஆற்றுக்கு அனுப்பும் நிகழ்ச்சி நடைபெறும். கம்பம் ஆற்றுக்கு எடுத்து செல்லும் போது கம்பத்துக்கு காவலாக ஸ்ரீ மாவடி ராமசாமி அம்சமாக அரிவாள் எடுத்து செல்லப்படும். இவ்விழாவில் ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்தை ஐந்து முறை வழிபாட்டு வலம்வரும் நிகழ்ச்சி பஞ்சப்பிரகாரம் என வழங்கப்படுகிறது. இதையடுத்து ஸ்ரீ மாரியம்மனும் ஸ்ரீ மாவடி ராமசாமியும் தனித்தனியே புஷ்ப பல்லக்கில் எழுந்தருளி வலம் வருவர்.. வீதி உலாவின் போது அனைவரும் கலந்து கொண்டு மஞ்சள் நீர் வைத்து அம்மனை வழிப்படுவார்கள். இதை ஆளும் பல்லக்கு என்றும் கூறுவார்கள். இதனையடுத்த நாள் ஊஞ்சல் உற்சவமும் பின்னர் சம்புரோட்சணை என்கிற அம்மன் குடிபுகுதல் நிகழ்ச்சியும் நடைபெற்று விழா இனிதே நிறைவுறும். இவ்விழா இம்மாவட்டத்தின் மிக முக்கிய திருநாளான கம்பம் ஆற்றுக்கு அனுப்பும் நாளன்று மாவட்ட உள்ளூர் விடுமுறையாக அரசு அறிவித்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது மூலவர் அருள்மிகு மாரியம்மன் சற்றே ஈசான்ய திசையை (வடகிழக்கு) நோக்கி அமைந்துள்ளதால், பெண் தெய்வங்களுக்கேயுரிய கடைக்கண் பார்வையருளால் கருணையுடன் அருள் பாலித்து பக்தர்களை காத்துவருவதாக நம்பிக்கை. இத்தனை சிறப்பு வாய்ந்த அருள்மிகு கரூர் மாரியம்மனைத் தரிசிக்கவும், வருகின்ற 11.5.2008 தொடங்கும் வைகாசி பெருவிழாவில் கலந்து கொண்டு அம்மன் அருள் பெறவும் அனைவரும் வருகை தரவேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

கோயில் நடை திறப்பு பொதுவான நாட்களில் காலை 6.00 மணி, திருக்காப்பிடுதல் இரவு 8.45 மணி (சிறப்பு தினங்கள் உற்சவ காலங்களில் நேரங்கள் மாறுதலுக்குட்பட்டது)

—

# உலகம் உய்ய உதித்த உடையவர்

பெரியநம்பி அவர்கள் ஆளவந்தார் அவதரித்து இருபத்தியோரு ஆண்டுகளுக்கு பிறகு கி.பி. 997–ம் ஆண்டு ஹேவிளம்பி வருஷம் மார்கழி மாதம் கேட்டை நட்சத்திரத்தில் புதன்கிழமை குமுதம் என்னும் நித்யசூரியின் அம்சமாய் பிராமண குலத்தில் பாரத்வாஜ கோத்திரத்தில் யஜுர்சாகையில் அவதரித்தார். இவருக்குப் புண்டரிகாட்சர் என்ற மகனும் அத்துழாய் என்ற மகளும் தோன்றினர். ஸ்ரீராமானுஜருக்கு ஸமாச்ரயணம் செய்த ஆச்சர்யன் பெரியநம்பியேயாவார். ஆளவந்தாரின் சீடர்களில் பெருமை நிறைந்தவராக இவர் இருந்ததால் எல்லோரும் இவரைப் பெரியநம்பி என அன்புடன் அழைத்தனர்.

காஞ்சியை நோக்கிப் பெரியநம்பிகள் விரைந்து கொண்டிருந்தபோது, அவருடைய உள்ளத்தில் கவலையும் ஆதங்கமும் நிரம்பி இருந்தன. ஞானகுருவான ஆளவந்தாரின் உடல்நலம் நாளுக்கு நாள் குன்றி வருவது குறித்து கவலையும், ஆளவந்தார் வளர்த்த வைணவ நெறியின் எதிர்காலம் குறித்த ஆதங்கமும் அவருடைய மனதை வாட்டி வதைத்தன. இருப்பினும் இராமானுஜரைக் கண்டு அவரிடம் பொறுப்புகளை ஒப்படைக்க விரும்பி ஸ்ரீரங்கத்திற்கு அழைத்துவரும் பொறுப்பினைத் தம்மிடம் ஒப்படைத்ததை நினைத்து அவர் மனம் ஆறுதல் அடைந்தது.

நான்கு நாட்களுக்கு பிறகு காஞ்சிபுரத்தை நெருங்கியபொழுது, அந்தி வேளையில் சூரிய ஒளியில் குளித்துக் கொண்டிருந்த பேரருளாளன் ஆலய கோபுரத்தினைக் கண்டு பணிந்து வணங்கிய பின், பெரியநம்பிகள் திருக்கச்சிநம்பியின் இல்லம் நோக்கி நடந்தார். பெரியநம்பியைக் கண்ட திருக்கச்சிநம்பிகள் மிகவும் மகிழ்ந்து வரவேற்று, ஞானகுருநாதன் ஆளவந்தாரின் உடல்நலம் பற்றிப் பெரியநம்பியிடம் கேட்டறிந்தார். பெரியநம்பியும் திருக்கச்சிநம்பியும், ஆளவந்தாரின் சீடர்களில் மிகவும் பெருமை பெற்றவர்கள்.

பின்னர் பெரியநம்பி தாம் காஞ்சிபுரம் வந்த நோக்கத்தையும், தம் குருநாதர் ஆளவந்தார் தமக்குப் பிறகு "ராமானுஜர், தம் குருபீடத்தினை அலங்கரிக்க வேண்டும்" என்று விரும்புவதையும், திருக்கச்சிநம்பியிடம் எடுத்துரைத்தார்.

பெரியநம்பி கூறிய வார்த்தைகளைக் கேட்ட திருக்கச்சிநம்பிக்கு இன்பத் தேன் வந்து காதினில் பாய்ந்ததுபோல இருந்தது. ஆளவந்தார் காஞ்சிபுரம் வந்திருந்தபொழுது, ஸ்ரீராமானுஜரைத் தம் கண்களால் பரிபூரணமாக கடாட்சித்ததை நான் கவனித்தேன், எனவே ஸ்ரீராமானுஜருக்குச் சிறந்த எதிர்காலம் உண்டு என்று, அன்றே நான் நிச்சயித்து விட்டேன் என பெரியநம்பிகளிடம், திருக்கச்சி நம்பிகள் எடுத்துரைத்தார். மேலும் "காஞ்சியின் செல்லப்பிள்ளையாக இருக்கும் ஸ்ரீராமானுஜர்



இப்பொழுது பேரருளாளனுக்குத் தீர்த்த கைங்கர்யம் செய்யும் பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருப்பதால், இந்தப் பணியிலிருந்து அவரை மீட்பது மிகவும் கடினம் எனவும், இருப்பினும் ஞானகுரு ஆளவந்தாரின் விருப்பத்தை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்பதால், ஆளவந்தாரின் ஸ்தோத்திர ரத்னம் – பாடல்களை ஸ்ரீராமானுஜர் கேட்கும் வண்ணம் பாடி, அதில் அவரை ஈடுபடும்படி செய்தால், ஆளவந்தாரின் விருப்பம் நிறைவடையும் என்றும், எனவே ஸ்தோத்திர ரத்னப் – பாடல்களை ஸ்ரீராமானுஜர் கேட்கும்படிப் பாடவேண்டும் என்றும் திருக்கச்சி நம்பிகள், பெரியநம்பிகளிடம் எடுத்துரைத்தார்.

பெரியநம்பியும் இதற்கு உடன்பட்டு காஞ்சி நகருக்கு வெளியே ஒரு சோலைக்குள் அமைந்திருந்த சாலைக் கிணற்றின் அருகே, சூரியன் உதிக்கும் முன்னரே வந்து ஸ்ரீராமானுஜரின் வருகைக்காகக் காத்திருந்தார். ஸ்ரீராமானுஜர் தோளில் நீர் நிரம்பிய குடத்துடன் கிணற்றுப் படிகளில் மெதுவாக ஏறி வரும்பொழுது, பெரியநம்பி கணீர் என்ற குரலில் மிகவும் இனிமையாக ஸ்தோத்திர ரத்ன பாடல்களைப் பாடலானார். திருமஞ்சன நீருடன் மேலே வந்த ஸ்ரீராமானுஜர் மெய்சிலிப்பு மேவிராய், கண்களில் ஆனந்த நீர் பாய, ஒரு நிமிடம் அசையாமல் நின்றார்.

"பிரம்மா, சிவன் என்று உலகேழும் பேச
இனிய சுலோகத்தைத்

திரமாய்க் கேட்டன்று இளையாழ்வார்
சிந்தை தெளியும் பயனுூர்ந்து

பரமாய் நின்ற அருளாளர் பாதாம் புயத்தில்
பரிந்துருகி

மரமாய் அசைவற்று ஓர் கடிகை நின்றார்
பகரு மறையவனே"

(ஸ்ரீ ராமானுஜ வைபவம் பாடல் 69)

பின்னர் பெரியநம்பிகளைப் பார்த்து இவ்வழகிய தோத்திரத்தை சொல்லுகின்ற உத்தம அந்தணரே "இதனை அருளிச் செய்தவர் யார்" என வினவவும், பெரியநம்பி, "ஆளவந்தார் அருளியது" என கூறவும், உடனே ஸ்ரீ ராமானுஜர் "அந்த பரம பக்தரை என் கண்ணால் ஸேவிக்கலாமா இதை மேலும் விரிவாக எனக்கு அவர் எடுத்துரைப்பாரா" என விருப்புடன் கேட்டார். பெரியநம்பியும் ஸ்ரீராமானுஜரை நோக்கி "இளையாழ்வாரே திருமாலை விட்டு, கணப்பொழுதும் நீங்காதவரான ஆளவந்தார் அடியார்களுடன் பரந்த சோலை சூழ்ந்த திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ளார். நீர் சீக்கிரத்தில் அங்கு வந்தால் அவரை இப்பொழுதே தரிசிக்கலாம்" என்று எடுத்துச் சொன்னார்.

பரவசம் எய்திய ஸ்ரீராமானுஜர் "இப்போதே நான் அவரைக் காண விழைகிறேன்" என்று மொழிந்தவராய் பேரருளாளன் திருக்கோயில் சென்று திருமஞ்சன நீரைத் திருக்கோயிலில் ஒப்படைத்துவிட்டு, ஸ்ரீ காஞ்சி வரதராஜப் பெருமாளிடம் விடைபெற்றுக் கொண்டு, தான் ஆச்சாரியராக அபிமானித்த திருக்கச்சி நம்பிகளிடம் பிரியாவிடை பெற்று, பெரியநம்பியுடன் ஸ்ரீரங்கம் நோக்கி நடந்தார். இது நிற்க.

அந்த நாளில் ஸ்ரீரங்கத்தில் ஆளவந்தார் தம் அடியார்கள் கூட்டத்துடன் இன்புற்று எழுந்தருளி இருக்கும்பொழுது, பெருமை மிக்க திருக்கோட்டியூர் நம்பியையும், திருமலை ஆண்டானையும், திருமலை நம்பியையும் அழைத்து "நாம் ஸ்ரீமந் நாராயணனது வைகுந்தத்தை அடையப் போகிறோம். நீங்கள் எல்லோரும் சேர்ந்து இருந்து, பெரியநம்பியின் மூலம் ஸ்ரீராமானுஜருக்கு நன்மைகளை எடுத்துச் சொல்லி, பகவத் ஸம்பந்தத்தை (பஞ்ச ஸமஸ்காரரம்) பண்ணுவித்து, திரு எட்டெழுத்தாகிய மந்திரத்தை உபதேசித்து இந்த உலகத்தினை நல்வாழ்வு பெறச் செய்யுமாறு, சொல்லுங்கள், என் பிரிவினால் வருந்த வேண்டாம்" என சமாதானப்படுத்தி வையுங்கள்" – என்று எடுத்துரைத்தார்.

மேலும் ஆளவந்தார் திருக்கோட்டியூர் நம்பியுடன் "ஸ்ரீராமானுஜருக்கு ஸம்பிரதாயப்படி சரம சுலோகத்தின் பக்குவத்தை உண்டாக்கி உபதேசிப்பீராக" என்றார். திருமலை ஆண்டானை நோக்கி "உமக்கு நான் சொல்லிக் கொடுத்த தமிழ் வேதத்தின் உட்கருத்துக்களை எல்லாம் ஸ்ரீராமானுஜருக்கு உபதேசிப்பீராக" என்றார். திருவரங்கத்து அரையரை அழைத்து "இரண்டு உண்மைகளைப் பொதிய வைத்துள்ளோம், அவ்விரண்டையும் ஸ்ரீராமானுஜருக்கு உபதேசிக்கும்படிச் சொல்லுங்கள் என்றும், திருமலைநம்பியை

அழைத்து வால்மீகி அருளிய ராமாயணம் எல்லாவற்றையும் உபதேசியுங்கள்" என்றும் கூறினார். அவ்வாறு சொல்லிய பிறகு, ஆளவந்தார் நான்கு வேதங்களும், ரிஷிகளும் தேவர்களும் கூட்டமும் அறிய முடியாத பெருமையை உடைய பரமபதமான திருநாடு அலங்கரித்தார். தேவர்கள் பூமழை பொழிந்தனர்.

**"வேதநான்கும் இருடிகளும் விண்ணோர்**
**குழுவும் இவளாமென**
**ஓதஅரிய பரமபதத்துற்றார் மற்றவ்**
**வருத்தத்தால்**
**போதமிக்க தொண்டர் குழாம்**
**புலம்பித்தேறி அவ்வுடலை**
**ஏதம்கடியும் பரம ரதத்தேற்றி இமையோர்**
**மலர்தூவ"**

(ஸ்ரீராமானுஜர் வைபவம் – பாடல் 78)

(தொடரும்)

– பெ. இராமநாதபிள்ளை, செயல் அலுவலர்,
திருமூர்த்திமலை, உடுமலை வட்டம்.








சென்னை, எழும்பூர் அருள்மிகு ஸ்ரீநிவாசப் பெருமாள் திருக்கோயிலில் 11-04-2008 அன்று நடைபெற்ற குடமுழுக்கு விழாவில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கேஆர். பெரியகருப்பன் அவர்கள் தமது துணைவியாருடன் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். குடமுழுக்கு விழாவில் பெருந்திரளான ஆன்றோர்களும், சான்றோர்களும் ஆன்மிகப் பெரியோர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# திருவிடைக்கழி திருத்தலம்

"திருக்குராவடி நிழல்தனில் உலவிய பெருமாளே என்று அருணகிரிநாத சுவாமிகள் புகழ்ந்து போற்றும் ஒப்பற்ற தலமான திருக்குராவடி என்னும் திருவிடைக்கழி அதிசயங்கள் அநேகமுற்ற அற்புதப் பதியாகும். தமிழ் நாட்டில் வேறு எங்கும் காண முடியாத தலவிருட்சம் குராமரமாகும்.'குராமரம்' மலைப் பிரதேசத்தில் மட்டுமே வளரக்கூடிய, காணக்கூடிய ஒப்பற்ற மரம். இம்மரத்தில் பூக்கும் குராமலரைப் பற்றி பாடாத இலக்கியமே கிடையாது. இந்து மதக்கடவுளைப் போற்றும் இலக்கியங்கள் மட்டுமல்லாது சமண, பௌத்த இலக்கியங்களிலும் சிறப்பாகப் பேசப்படும் மலர். குராமலரின் அரும்பு மிகக் கூர்மை கொண்டதாக இருக்கும். அதனால் அதைப் பாம்பின் பல்லுக்கு உவமையாகக் கூறுவர்.

குராமரம் தலவிருட்சமாக உடைய திருவிடைக்கழிக்கு 'குராவடி' என்று பெயர். காஞ்சிபுரம் ஏகாம்பரேச்வரர் கோயிலுக்கு தல விருட்சம் மாமரம். அதனால் அதற்கு 'காஞ்சி மாவடி' என்று பெயர். அதைப் போல இந்த குராமரம் மிகவும் புனிதம் வாய்ந்தது. 'குரா' என்பதைத் திருப்பினால் 'ராகு' என்று வருமல்லவா? ராகு தோஷம் நீக்கும் இப்புனித குராமரத்தைச் சுற்றிவந்து வழிபாடு செய்வோர்க்கு ராகு தோஷம்–குறிப்பாக திருமணத்தடை–மற்றும் புத்திர தோஷம் நீங்கும் என்பது அனுபவ உண்மை. முருகன் இக்குராமரத்தடியில் உலா வந்தார் என்றும் அருணகிரியார் பாடுகிறார். 'சிறக்கு மாதவர் **முனிவரர் மகபதி இருக்கு வேதனும் இமையவர் பரவிய திருக்குராவடி நிழல்தனில் உலவிய பெருமாளே**' என்ற அருணகிரியாரின் வாக்கு திருக்குராவடியின் பெருமைகளைப் பகரும்.

அஷ்ட வீரட்ட தலங்களில் காலனைக்காய்ந்த கண்ணுதற் பெருமான் விளங்கும் திருக்கடவூருக்கு அருகில் ஆறுகிலோ மீட்டரில் அமைந்த அழகான தலம் திருவிடைக்கழி, சீர்காழி. மயிலாடுதுறை ஆகிய இடங்களிலிருந்து பஸ்வசதி உள்ளது. குராப்பள்ளி, மகிழவனம், நாகதலம் என்றெல்லாம் பெயர்களைக் கொண்ட இத்தலத்தில் வேறு எங்கும் காணமுடியாத அதிசயம் ஒரே கருவறையில் முருகப்பெருமானும், சிவலிங்கமும் காணப்படுவதுதான். முருகப் பெருமானுக்குப் பின்புறம் சற்று வடமேற்காக பாபநாசப் பெருமான் கருவறை அமைந்துள்ளது. முருகப்பெருமான் இரண்டு கரங்கள் கொண்டு ஒருகரம் அபயமாகவும் மற்றொன்று இடுப்பிலும் ஆக குமார தந்திரத்தில் கூறப்படும். 'சுப்ரமண்யர்' என்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். இவருக்கு முன்புறம் ஸ்படிக லிங்கமும் வடக்கில் வசிஷ்டலிங்கமும் தெற்கில் தட்சிணாமூர்த்தியும் மேற்கில் பாபநாசப் பெருமானும் உள்ளனர். நாற்புறங்களிலும்



சிவபெருமான் கோலங்கள் சூழ்ந்து இருக்க இங்கு சிவகுமாரன் குமார சிவமாக அருள்பொழியும் அதியற்புத அமைப்பு அகிலத்திலேயே திருவிடைக்கழியில் மட்டுமே காணமுடியும்.



இத்தலத்தில் சந்திரசேகரர், சோமாஸ்கந்தர் ஆகிய மூர்த்திகளின் வலக்கரத்தில் வஜ்ரவேல் காணப்படுவதும் சண்டிகேச்வரர் வஜ்ரவேலை ஏந்தியிருப்பதும், நடராஜர் சந்நதியில் வில்லேந்திய வேலன் இரண்யாசுர சம்ஹார மூர்த்தி என்ற திருநாமத்துடனும், வஜ்ரவேலே அஸ்திர தேவராக விளங்குவதும் இங்கு எல்லாமே சுப்ரமண்ய சொருபமாகக் காட்சியளிப்பது குறிப்பிடத்தக்கது.

தில்லையில் அம்பலக் கூத்தனுக்கு களி உணவு அளித்தவரும், தில்லை நடராஜப் பெருமான் திருத்தேரை—ஓடாமல் நின்ற போது 'திருப்பல்லாண்டு' பாமாலைபாடி திருத்தேர் நடக்கும்படிச் செய்தவருமான சேந்தனார் திருவிடைக்கழி திருத்தலத்தில் திருமடம் அமைத்து தைப்பூச நன்னாளில் முத்தி பெற்றார். இவர் திருவிடைக்கழி முருகன் மீது பாடிய திருவிசைப்பா ஒன்பதாம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது. சைவத்திருமுறைகளில் முருகனைப்பாடி திருவிசைப்பா பெற்ற ஒரே முருகன் தலம் திருவிடைக்கழி மட்டுமே. இத்திருவிசைப்பா முருகனை நினைத்து ஏங்கித் தவிக்கும் தலைவியின் (ஜீவாத்மாவின்) நிலைகண்டு அவளது தாய் இரங்கிக் கூறும் வகையில் நற்றாயிரங்கல் என்னும் அகப்பொருள் துறையில் அமைந்துள்ளது. இதனைத் திருமணமாக வேண்டிய பெண்கள் பாராயணம் செய்து குராவடிக் குமரனை வழிபாடு செய்தால் குமரனைப் போன்ற அழகான அறிவாற்றல் நிறைந்த கணவனை அடைவர் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ. இங்கு தெய்வானை அம்மைக்கு மட்டுமே தனிச் சந்நதி உள்ளது. அம்பிகை தெற்கு நோக்கிய சந்நதியில் முகத்தை சற்று கிழக்கே திருப்பி முருகனை கண்டின்புறும் வகையில் காட்சியளிக்கிறாள்.

புராண வரலாற்றுப்படி இங்கு சூரபத்மனின் இரண்டாவது குமாரனை இரண்யாசுரனை சம்ஹரித்த திருநாள் வைகாசி மாதம் சதய நட்சத்திரமாகும். இங்கு பத்து நாட்கள் திருவிழா நடைபெறுகின்றது.

இத்தலத்து முதல் ராஜகோபுரம் முருகப் பெருமான் சந்நதிக்கு நேராகவும் இரண்டாவது கோபுரம் கருவறையில் உள்ள சிவபெருமானுக்கு நேராகவும் அமைந்துள்ளன. அதைப் போல சிவனுக்கு மகிழமரமும், முருகனுக்கு குராமரமும் தல விருட்சங்களாகும். சிவ சண்டிகேச்வரர், குக சண்டிகேச்வரர் என்ற இரண்டு மூர்த்திகள் உண்டு. நாடோறும் காரண ஆகமமுறைப்படி பூஜைகள் நடைபெறுகின்றன, அர்த்தஜாமத்தில் குமரன் குராமரத்தடியில் தவம் செய்து சிவ பூஜை செய்த பத்ரலிங்கத்திற்கு முதலில் பூஜையும் பிறகு கருவறையிலும் வழிபாடும் நிகழ்கின்றன. நவகோள்களில் நாயகனாக இங்கு முருகனே காட்சியளிப்பதால் இங்கு நவகிரக சந்நதி கிடையாது. ஆண்டுதோறும் புரட்டாசி மாதத்தில் சிதம்பரம் திருக்கோயிலிலிருந்து இத்தலத்திற்கு (52 கி.மீட்டர்) பாதயாத்திரையாகப் பல்லாயிரக் கணக்கான அடியார்கள் வந்து இத்தல முருகனுக்கு அபிஷேக வழிபாடு செய்கிறார்கள். இத்தலத்தை அடியார்களுக்கு ஆற்றுப்படுத்திய முருகனடியார் அமரர் மங்கல முடையார் ஆவர். அவரது பெரும் முயற்சியில் ராஜகோபுரம் மற்றும் திருப்பணிகள் நடைபெற்று கும்பாபிஷேகம் நடைபெற்றது.

சேந்தனார் திருவிசைப்பா, அருணகிரிநாதர் திருப்புகழ், மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களது பிள்ளைத்தமிழ் தில்லையாளி தம்பியப்ப செட்டியார் இயற்றிய முருகன் அந்தாதி குரவைலிங்கர் இயற்றிய தலபுராணம், சாதுராம் சுவாமிகள் சந்தப்பா முதலியன இத்தலத்தின் பெருமைகளையும் சிறப்புகளையும் பேசும்.

வலையப்பேட்டை ரா.கிருஷ்ணன்

அருள்மொழி அரசு
திருமுருக கிருபானந்த வாரியார்

# அவசியம்

ஆறுமுகப் பெருமானுடைய அடிகளார் மேற்கொள்ள வேண்டிய கடமைகள் பல இருப்பினும், அவற்றுள் மிகமிக அவசியமான ஒரு கடமையுண்டு.

கடமையுணராதது மடமை. ஒவ்வொருவருக்கும் சிறந்த ஒரு கடமையுண்டு.

முருகப் பெருமானுடைய மெய்யடியார்கட்கு இதனை வற்புறுத்திக் கூறுகின்றேன், அன்பின் காரணமாக அறிவுறுத்துகின்றேன்.

முருகவேளின் வலப்புறத்தில் வள்ளிநாயகி; இடப்புறத்தில் தெய்வயானை; அவருடைய திருக்கரத்தில் வேலாயுதம்.

மனிதர்கட்கு இன்றியமையாத தேவைகள் மூன்று. இம்மை, மறுமை, வீடு என்பன.

(1) இந்த உலகத்தில் நல்வாழ்வு.

(2) மேல் உள்ள சுவர்க்க உலகில் இன்ப வாழ்வு.

(3) அதற்குமேல் முத்திபேறு.


இந்த மூன்று நலன்களையுந் தரவல்ல தெய்வம் முருகவேள். எம்பெருமான் தன் வலப்பக்கத்தில் அமர்ந்துள்ள வள்ளி இம்மண்ணுலகில் அவதரித்தவர்; அவர் மூலம் இகவாழ்வைத் தருவார்.

தன் இடப்புறத்தில் அமர்ந்துள்ள தெய்வவுலக மடந்தையாகிய தெய்வயானையம்மை மூலம் பரவாழ்வு (சுவர்க்க இன்பம்) தருவார்.

தன் திருக்கரத்தில் அமர்ந்திருக்கின்ற ஞானமாகிய வேலாயுதத்தால் வீடுபேற்றினை வழங்குவார்.

நமக்கு முதலில் இம்மை நலமும், பின்னர் மறுமை நலமும், அதற்குப்பின் முத்தி நலமும் முறையே வரவேணும்.

உடம்புடன் வாழ்கின்ற நமக்கு இம்மை



குருவே துணை
நாளும் எமக்கு நலமே தருவாய் போற்றி

நலம் அவசியம் வேண்டும். வீடு, வாசல், நிலம், புலம், வண்டி, வாகனம், துணி, மணி, பொன், பொருள், ஆடை, அணிகலம், மனைவி, மக்கள் என்பன அனைத்தும் இம்மை நலங்களாம்.

இவற்றை வழங்கும் தேவி வள்ளிபிராட்டியார் வள்ளியை வழிபடுவோர்க்கு இகவாழ்வு சிறக்கும். வள்ளி நாயகியார் திரு அவதாரம் புரிந்த திருத்தலம் வள்ளிமலை.

இது தொண்டை நன்னாட்டில் இருக்கின்றது..

கந்தபுராணந்தான் சிறந்த பிரமாணம்; அதில் கூறுவதைக் காண்க.

திருமாலின் இருகண்களில் இரு நங்கையர் அவதரித்தனர்; ஒருத்தி அமுதவல்லி; ஒருத்தி சுந்தரவல்லி.

இம்மங்கையர் இருவரும் முருகவேளை மணஞ்செய்ய விரும்பி சரவணப் பொய்கையில் பலகாலந்தவம் புரிந்தனர். முருகவேள் தோன்றி அமுதவல்லியை விண்ணுலகிலும், சுந்தரவல்லியை மண்ணுலகிலும் பிறந்து தவம்புரியுமாறு பணித்தருளினார். இதன் குறிப்பு யாது? மண்ணுலக நலன்களையும், விண்ணுலகத்தில் தோன்றும்

தெய்வயானையம்மை மூலம் விண்ணுலக நலன்களையும் தரும் பொருட்டு என வுணர்க- இகபரம் இரண்டும் தரும் தெய்வம் பொருட்டு எம்பிரான். அதனால் அருணகிரி நாதரும், 'இகபர செளபாக்யம் அருள்வாயே' என்று பாடுகின்றார்.

இறைவன் பணித்தவண்ணம் மூத்தவளான அமுதவல்லி தானே ஒரு குழவியாகி, சூரபன்மனுக்கு அஞ்சி மேருமலையில் ஒளிந்திருந்த இந்திரனிடம் போய் 'நின்மகள் யான்' என்றாள்.

இந்திரன் சத்தியவுலகிலே மனோவதி நகரிலே கற்பக மரத்தின் கீழ் தன் ஐராவதம் என்ற தெய்வ யானையால் வளர்க்கச் செய்தனன்.

இளையவளாகிய சுந்தரவல்லி மண்ணுலகிலே தொண்டை நன்னாட்டிலே மேற்பாடிக்கு அருகில் உள்ள மகாபுனிதமான வள்ளிமலையில் வந்து பன்னெடுங்காலம் தவம் புரிந்தாள்.

**"முற்றுணர்ந்திடு சுந்தரி என்பவள் முருகன்**
**சொற்ற தன்மையை உளங்கொடு தொண்டை நன்னாட்டில்**
**உற்ற வள்ளியஞ் சிலம்பினை நோக்கியாங் குறையும்**
**நற்றவச் சிவ முனிமகளாகவே நடந்தாள்**
**அயன் படைத்திடும் அண்டத்துக் காவியாய்ப்**
**பயன் படைத்த பழம்பதி என்பவரால்**
**நயன் படைத்திடு நற்றொண்டை நாட்டினுள்**
**வியன் படைத்து விளங்கு மேற்பாடியே**
**ஆயதொல்லை யணி நகர் ஞாங்கரின்**
**மீயுயர்ந்ததொர் வெற்புநிற் கின்றதால்''–**
**கந்தபுராணம்**

பின்னர் திருமாலே, அங்கு முனிவராகத் தோன்றித் தவம் புரிந்து கொண்டிருந்தார். இலக்குமிதேவி மானுருவங் கொண்டு வந்தாள். அம்மானை அம்மான் பார்க்க, அப்பார்வையால் சுந்தரவல்லி மான் வயிற்றில் புகுந்தாள் மான் வள்ளிக்குழியில் குழந்தையைப் பெற்றது. திருமாலின் மற்றொரு அவதாரமாகிய உபேந்திரன் நம்பிராஜனாகப் பிறந்தான். அந்த நம்பி பிராட்டியைக் கொண்டு போய் வளர்த்தான்.

வள்ளியென்று பேர் புனைந்த எம்பிராட்டி வள்ளிமலையின் தினைப்புனங் காவல் புரிந்தனள்.

அத்தேவி தினைப்புனங் காத்தபோது அவள் ஆலோலப் பாடலைக் கேட்டுச் சராசரங்கள் எல்லாம் உருகின.

**மையல் குறவர் குறத்தியர்கள்**
**இருளு மடம் போய் தெருளெய்த**
**மான் பசியும் மனப் பயமும்**
**மறந்து சுரந்த மடிப்பாலைப்**
**பையப் பதுங்கும் புலிப்பிணவின்**
**பறழுக் கருத்திக் கொலை மறந்த**
**பாரப் புதலின் முலைப் பாலைப்**
**பன்றிக் குருளைக் கினிதூட்டக்**
**கையிற் கவணில் பதித்த மணிக்**
**கல்லும் உருகக் கிளைகள் தினை**
**சுவராதிருந்து கசிந்துருகக்**
**கனிவாய் ஆலோலம் புகலும்**
**தையற் குறத்தி மனம் உருக்கும்**
**சமர்த்தா தாலோ தாலேலோ**
**தாமக் குவளைத் திருமலை வித்**
**தகனே தாலோ தாலேலோ**

– திருமலை முருகன் பிள்ளைத்தமிழ்

இங்ஙனம் சுந்தரஞான மென் குறமாது ஞானத்தினைப் புனங்காத்திருந்தபோது அப்பிராட்டியின் தவங் காரணமாக தணிகை நாயகன் வேடனாகவும் விருத்தனாகவும் வந்து தன் வேதமுங் காணாத விமல சரளாவிந்தங்களை வைத்துப் பலகாலும் உலாவிய இடம் வள்ளிமலையென வுணர்க.

அருணகிரிநாதர் முடி மீது முருகன் தன் அருண சரண மலரை வைத்துச் சூட்டினான். அந்த அருமையை அவர் சுந்தரநுபூதியில் 44–வது பாடலில் கூறுகின்றார்.

முருகன் திருவடியை என் சென்னிமேல் சூட்டினான். அத்திருவடி நான்கு இடங்களில் கமழுந்தன்மையானது. அதாவது முருகன் பாதம் நான்கு இடங்களில் பட்டன.

1. முத்தி வீடு

2. தேவர்கள் தலை

3. வேதம்

4. வள்ளிமலை

நம்மால் முத்தி வீட்டையும், தேவர்கள் சென்னிகளையும், வேதங்களையும் காண முடியாது. வள்ளிமலையைக் காணலாந்தானே? அப்பன் அடிமலர் பலகாலுந் தோய்ந்த அற்புதத்தலம் வள்ளிமலை.

**"சாடுந் தனிவேல் முருகன் சரணஞ்**

**சூடும்படி தந்தது சொல்லுமதோ**

**வீடுஞ் சுரர் மாமுடி வேதமும் வெங்**

**காடும் புனமுங் கமழுங் கழலே**
**– அநுபூதி**

**எறுழிபுலி கரடியரி கரிகடமை வருடையுழை**

**இரலை மரை இரவு பகல் இரைதேர் கடாடவியில்**

**ஏயின ரிடும் இதணதனில் இளகு தினை கிளிகடிய**

**இனிது பயில் சிறுமிவளர் புனமீதுலாவுதும்**

**உபயசதுர் மறையின்முத னடுமுடிவில் மணநாறு சீறடியே"**

**– சீர்பாத வகுப்பு**

**" இமையவர் முடித்தொகையும் வனசரர் பொருப்பும்**

**என திதயமு மணக்கும் இரு பாதச்சரோருகனும்"**
**– திருவகுப்பு**

**சுனையோடருவித் துறையோடு பசுந்**

**தினையோ டிதணோடு திரிந்தவனே –**
**அநுபூதி**

இத்தகைய மகா புனிதந் தங்கிய வள்ளிமலையை ஒவ்வொரு முருகனடியாரும் தெரிசித்து நலம் பெற வேண்டியது அவசியம்.

அன்றி வள்ளிமலையில் நிகழ்ந்த ஒரு அதிசயத்தையும் இங்கே கூறுகின்றேன்.

ஆறு வருடங்கட்குமுன் வள்ளிமலையில் படித்திருப்பணி நடந்து கொண்டிருந்தது. அத்திருப்பணிக்கு அடியேன் தலைவன்.

வேலூர் வைத்தியபூபதி அப்பாதுரை அவர்கள் செயலாளர். டாக்டர் அப்பாதுரை, வள்ளிமலையின் அடிவாரத்தில் தங்கித் திருப்பணியைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

மலையில் பாதிவரை படிவேலை நடந்தது. பாதிமலையில் பழைய நான்கு கால் மண்டபம் இருந்தது. அதைப் பெயர்க்க முயன்றனர்.

கொத்தனார்களில் இருவர்கள் அடியில் உள்ள பழைய படிக்கல்லைப் பெயர்த்தார்கள்.

மட்டிப்பால் சாம்பிராணிப் புகை குபு குபு என்று உள்ளே இருந்து வந்தது. அந்த இருவரும் வாயிலும் மூக்கிலும் உதிரம் வந்து மயங்கி விழுந்து விட்டார்கள்.

அருகில் இருந்த சித்தாள்கள் ஓடோடிச் சென்று வைத்திய பூபதி அப்பாதுரையவர்களிடம் கூறினார்கள். அவர் விரைந்து சென்று பார்த்தார். படியைப் பெயர்த்த இடத்தில் மலைக்குள் பார்த்தபோது, ஒரு முனிவர் உருவம் மங்கலாகத் தெரிந்தது; அப்பாதுரை கீழே விழுந்து வணங்கி கன்னத்தில் அடித்துக் கொண்டு அப்படியே படிக்கல்லை வைத்து மூடிவிட்டார்.

வள்ளிமலையில் எல்லாப்படிகளும் புதுமையாகப் போடப்பட்டன. இந்த இடத்தில் மட்டும் பழைய மண்டபத்தை அப்படியே விடப்பட்டுள்ளது. இதன் காரணம் பலருக்குத் தெரியாது.

இந்த அரிய நிகழ்ச்சியைத் திரு. வைத்தியபூபதி என்பால் கூறினார். இன்னும் பல அதிசயங்கள் நிறைந்த தலம் இது.

மேலும் மலைமீது சுவாமி எழுந்தளியிருப்பது குகைக் கோயில். குகையில் இருப்பதனால் குகன் என்று கூறுவர்.

குகைக்குமேல் தூபி கட்டியுள்ளது

அன்றியும் மலையின் உச்சியில் சூரியன் காணாத சுனையுளது. கடுங்கோடையிலும் நீர்வற்றாமல் சிவஞானிகள் உள்ளம்போல் தெளிந்து, கற்புடைய மாதர் உள்ளம் போல் குளிர்ந்து இருக்கும்.

இச்சுனையில் தான் முருகன் வள்ளியுடன் நீராடியது, இம்மலையில் வள்ளியின் பரணும் வள்ளிநாயகியின் கோயிலும் இருக்கின்றன.

இன்றும் பல மாதவர்கள் தங்கித் தவம் புரிகின்றார்கள்.

தவம் புரிவார்க்குத் தனிமை தரும் இனிமையான திருத்தலம்.

இத்தலம் காட்பாடி–வேலூரிலிருந்து 17 மைல், வட கிழக்கிலுள்ளது. சித்தூருக்குச் செல்லும் மற்றொரு பாதையில் உள்ளது. பஸ் வசதியுண்டு. வழியில் திருவலம் என்று ஒரு சிவத்தலம் உளது. தேவாரம் திருப்புகழ் பாடல் பெற்றது. பெரிய புராணத்தில் சேக்கிழார் இத்தலத்தைக் கூறியுள்ளார்.

திருவலத்திலிருந்து வடக்கே ஆறுகல் தொலைவில் வள்ளிமலை உள்ளது.


ஆதலால் ஆறுமுகன் அடியார்கள் ஆயுளில் ஒரு முறையாவது வள்ளிமலை முருகனையும் வள்ளிநாயகியையும் தரிசிப்பது அவசியம்.

அங்ஙனத் தரிசித்தோர் இம்மை நலன்களை எளிதிற் பெறுவர்.

“வள்ளி படர் சாரல் வள்ளிமலை மேவு
வள்ளி மணவாளப் பெருமானே“





## 15-04-2008

அன்று நாமக்கல் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் புதியதாக இந்து சமய அறநிலையத் துறை உதவி ஆணையர் அலுவலகங்கள் துவங்கப்பட்டன.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்


# கணக்கில் வராத வரவும் கணக்கிலடங்காத இலாபமும்

**முன்னுரை**

தோத்திர நூல்களாகிய பன்னிரு திருமுறைகளில் திருவாசகமும், திருகோவையாரும் அடங்கும். இவ்விரண்டையும் அருளிச் செய்த அருளாளர் நால்வரில் ஒருவரான மணிவாசகப் பெருமான், சிவமெனும் செம்பொருளைச் சிந்தித்து, சிவனடியார்கட்குத் தொண்டு செய்து, மனித குலத்திற்கு வழிகாட்டிகளாக வாழ்ந்த அருளாளர்கள் அறுபத்தி மூன்று நாயன்மார்கள். நெஞ்சை உருக்கி பக்திப் பரவசத்தில் ஆழ்த்தக் கூடிய, ஈடு இணையற்ற, தேனெனும் திருவாசகத்தை அருளிய மணிவாசகப் பெருந்தகை இந்த அறுபத்தி மூவரில் ஒருவராகக் கணிக்கப்படவில்லை. இருப்பினும் அவரது படைப்புக்களின் சிறப்புகள் அளவிலடங்கா. இந்த மையக் கருத்தை சிறிது சிந்திப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

அறுபான் மும்மை நாயன்மார்கள் பல்வேறு இனத்தவராகவும், பல்வேறு காலகட்டங்களில் வாழ்ந்தவராகவும், பற்பலத் தொழில்கள் புரிந்தவராகவும் இருந்தனர். சிவ நெறி ஒழுகி, சிவனடியார்க்குத் தொண்டு செய்வதில் அனைவரும் ஒரே வகையினரே. 'தொண்டர்தம் பெருமையும் சொல்லவும் பெரிதே' என்பது ஆன்றோர் வாக்கு. சிவனடியார்களையும், நாயன்மார்களையும் சிவன் எனவே கொண்டு வழிபட வேண்டும் என்பது சிவ ஞானபோதக் கருத்து.

பன்னிரு திருமுறைகள் சித்தாந்த சைவர்களின் வேதம். அவையாவும் மந்திரங்களாகவே உள்ளமையால் மந்திர வடிவினனாகிய இறைவனின் வடிவமே அவை. சிவபெருமானையே முழு முதற் கடவுளாகவும், பிற அனைத்தும் உயிர்களே என்றும் கூறி, சிவ பரத்துவம் பேசும் திருமுறைகள் எண்ணிக்கையில் பன்னிரண்டு. 'முறை' என்றால் 'நூல்' என்று பொருள். திருமுறை என்றால் அருள் நூல் என்றாகிறது. பல்வேறு காலகட்டங்களில் அருளப்பட்ட அவற்றின் ஆசிரியர்கள் இருபத்தி எழுவர்.



பன்னிரு திருமுறைகளில் எட்டாம் திருமுறையாகக் கொள்ளப்பட்டவையே மணிவாசகப் பெருமான் அருளிச் செய்த

திருவாசகமும், திருக்கோவையாரும். 'திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்ற பெருமையுடத்து திருவாசகம். பிற திருமுறைகட்கெல்லாம் இல்லாத பல பெருமைகளைக் கொண்டது இந்த அருள் நூல். கிறித்துவப் பாதிரியாரான டாக்டர் ஜி.யு.போப் ஐயரைத் தன்பால் ஈர்த்து, அவர் உள்ளத்தை உருக்கி, ஆங்கில மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது இது. இறைவனின் மறை மொழி வடிவமே திருவாசகம்.

**நாயன்மார்கள் அறுபத்தி மூவரானது**

அறுபத்தி மூன்று நாயன்மார்கள் பிறப்பால், பிறப்பால், இடத்தால், காலத்தால், இனத்தால், தொண்டால், தொழிலால் வேறுபட்டிருப்பினும் இவர்கள் அனைவரும் இறை அருளால் ஒரு வகையினரே. குரு, லிங்கம், சங்கமம் என்ற மூன்று வகை வழிபாட்டு நெறிகளில் ஏதேனும் ஒன்றை ஒவ்வொருவரும் கடைபிடித்து ஒழுகினர்.

தம்பிரான் தோழராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருவாரூர்த் தியாகராசப் பெருமான் 'தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' என்று அடி எடுத்துத் தர, 'திருத் தொண்டத் தொகை' என்ற திருப்பதிகத்தைப் பாடினார். விறன்மிண்டார் என்ற சிவனடியார், சிவனடியார்களைப் புறக்கணிப்பதாகக் கூறி சுந்தரரை கடிந்து கொண்டதையடுத்து, சிவ பெருமானின் திருவுளப்பாங்கின் வண்ணம், அவர்தம் அருளால், சிவனடியார்கட்கு தாம் எப்போதும் தொண்டரே என்பதைக் காட்ட இப்பதிகத்தைப் பாடினார். சுந்தரர் கணிப்பில் தனி அடியார்கள் அறுபது பேர்தான். இந்த அறுபது அடியார்களே திருத்தொண்ட தொகையில் இடம் பெற்றவர்கள்.

பின்னர் 'தொகை'யின் மெய்ப்பொருள் உலகத்தில் நிலை பெற்று விளங்கும் பொருட்டு நம்பியாண்டார் நம்பி என்னும் சிவவேதியர் திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாரின் திருவருளால் 'திருத்தொண்டர் திருவந்தாதி'யாக அடியார்களைப் போற்றி பாடினார்.

'தொகை', 'அந்தாதி' ஆகியவற்றைத் தொடர்ந்து சேக்கிழார் பெருமானால் அருளப்பட்டதே பெரிய புராணம் என வழங்கும் 'திருத்தொண்டர் புராணம்' அது பன்னிரண்டாம் திருமுறையாக விளங்குகிறது இந்நூல். அறுபத்தி மூன்று நாயன்மார்களின் வரலாறுகள் 'ஹேகியோ கிராஃபி, எனப்படும் இந்த மாபெரும் வரலாற்று நூலில் விரித்துரைக்கப்படுகின்றன. கூத்தப் பெருமான், 'உலகெல்லாம்' என அடியெடுத்துக் கொடுக்க அருளப்பட்ட இந்நூல், சைவ சமயப் புராணங்கள் மூன்றினுள் ஒன்றாகும்.


**மாணிக்கவாசகர், கணக்கில் வராதவரவு**

மணிவாசகரின் திருவாசகத்தின் பெருமையைச் சொல்லி முடியாது. சைவ மந்திரங்கள் பதினொன்று – ஈசானம், தத்புருடம், அகோரம், வாமதேவம். சத்யோஜாதம், ஹ்ருதயம், சிரசு, சிகை, கவசம், நேத்ரம், அஸ்திரம். இவற்றுள் எட்டாவது மந்திரமாகிய 'சிகா' மந்திரம் 'ஓம் சிகாய நம' என்பதாகும். திருவாசகம் எட்டாம் திருமுறையாகும். மனிதனின் உடல் உயரம் எட்டு சான். மனித உடலில் சிகைக்கும் மேலே எந்த ஒரு உறுப்பும் கிடையாது. திருவாசகத்திற்கு மேலே எந்த ஒரு தோத்திர நூலும் கிடையாது.

'தோத்திரத்திற்கு திருவாசகம்' சாத்திரத்திற்கு திரு மந்திரம்' என்பது அருளாளர் கூற்று. இத்தகைத்தான எட்டாம் திருமுறையின் ஆசிரியர் மணிவாசகர் பெருமான், அறுபத்தி மூன்று கணக்கிலே வாரா நின்றார். இது அதிர்ச்சியையும் வருத்தத்தையும் தருவதாகவே அமைந்துவிட்டது.

சுந்தரர் பெருமான் தன் திருத்தொண்டத் தொகையில் மணிவாசரைக் குறிப்பிடாததாலேயே, நம்பி யாண்டார் நம்பிகள் தம் அந்தாதியிலும், சேக்கிழார் தம் பெரிய புராணத்திலும் அவரைச் சேர்க்கவில்லை என்று கருதலாம். சுந்தரர் பார்வையில் மாணிக்கவாசகர் சுந்தரர் காலத்திற்குப் பின் தோன்றியவரா? சுந்தரரின் காலம் எட்டாம் நூற்றாண்டு என்றும் மாணிக்கவாசகரின் காலம் ஒன்பதாம் நூற்றாண்டு என்றும் கூறப்படுகிறது. ஆயினும் மாணிக்கவாசகரின் காலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டே என்று தவத்திரு மறைமலை அடிகள், அருணை வடிவேலு முதலியார் போன்ற பல அறிஞர்கள், வரலாற்று இலக்கியச் சான்றுகளை முன் வைத்து உறுதி படக் கூறியுள்ளனர்.

காலத்தால் வெகுவாக முற்பட்ட



காரணத்தாலேயே மாணிக்க வாசகரின் வாழ்க்கை வரலாறு இன்றும்

துல்லியமாக அறிந்துரைக்கப்படாமல் சர்ச்சைக்குரிய ஒன்றாகவே இருந்து வருகிறது. அவரின் வரலாறு பற்றிய செய்திகள் பல புராணங்களில் சில வேறுபாடுகளோடும் முரண்பாடுகளோடும் காணப்படுகின்றன. திருவாதவூரடிகள் புராணம், திருவுத்திர கோச மங்கைப் புராணம், பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடல் புராணம், சில தலபுராணங்கள் ஆகியவையே அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றுச் செய்திகளுக்கு மூலம். இப்புராணக் குறிப்புகள் பல அகச்சான்றாகத் திருவாசகத்தில் காணப்படும் கூற்றுக்களுக்கு மாறுபட்டவையாகவும் உள்ளன. அகச்சான்றுகளைத் தெளிவாக ஆராய்ந்து, மாணிக்கவாசகரின் காலம் கி,பி, மூன்றாம் நூற்றாண்டே என்று கூறுகிறார் டாக்டர் சிவப்பிரியா. முதல் அருட்கவி மாணிக்கவாசகரே என்பது பல அறிஞர்களின் முடிவு.

தேவாரம் பற்றிய குறிப்பேதும் திருவாசகத்தில் காணப்படவில்லை யாதலால் காலத்தால் முற்பட்டவரே மணிவாசகர் என்று துணிய முற்பட்டால், தேவாரங்கள் தில்லைக் கோயிலினுள் பூட்டி வைக்கப்பட்டு, அவை பற்றி எவரும் அறியாத காலக்கட்டத்தில் (அதாவது, மூவர் முதலியகட்குப் பின்னரே ) மணிவாசகர் அவதரித்திருப்பார் என்ற மாற்றுக் கருத்து எழுகிறது.

தேவாரங்கள் வேதங்களையே அதிகமாகப் பேசுகின்றன, மாறாக, திருவாசகம் 'ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான்' என்று சிவாகமங்களைப் பற்றியே அதிகமாகப் பேசுகிறது. ஆகமம் போற்றுதல் பிற்கால நிகழ்வே ஆதலால், வாதவூர் அடிகள் காலத்தால் பிந்தியவர்தானோ? இருதரப்பு வாதங்களும் நீடிக்கும் நிலையில் நம்முடைய நிலைப்பாடுதான் என்ன?


மணிவாசகப் பெருமான், அறுபத்து மூவரில் ஒருவராகக் கணிக்கப் பெறாததற்குக் காரணம் அறிய முற்படுகையில் அவரின் காலம் பற்றிய சர்ச்சையை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. சர்ச்சையை இலக்கிய ஆய்வாளர்கட்கு விட்டுவிட்டு, சிறிது யதார்த்தத்திற்கு வந்து விடுவோமே.

– அடுத்த இதழில் தொடரும்

சேத்துப்பட்டு சித்தாந்த இரத்தினம்
டாக்டர் எம். ஆர். சந்தானம்

திருக்கோயில்

திங்கள் இதழ்



| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ. 10/- |
| ஓராண்டு சந்தா | ரூ. 120/- |
| ஐந்தாண்டு சந்தா | ரூ. 500/- |
| பத்து ஆண்டுச் சந்தா | ரூ. 1000/- |
| ஆயுட்காலச் சந்தா | ரூ. 1500/- |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

திருக்கோயில் இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்

விளம்பரக் கட்டணம் விபரம்

| | |
|---|---|
| 1.பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ. 15,000/- |
| 2.முன்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 10,000/- |
| 3.பின்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 7,500/- |
| 4.உட்புறம் முழுப்பக்கம் | ரூ. 5,000/- |
| 5.உட்புறம் அரைப்பக்கம் | ரூ. 3,000/- |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை

ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,
119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.
என்ற முகவரிக்கு அனுப்பவும்

# திருவருள் புரியும் திருப்போரூர் அருள்மிகு கந்தசுவாமி

வளமான தொண்டை நாட்டில் சிறப்பு மிகுந்த முருகன் திருக்கோயில்கள் பல உள்ளன. அவற்றில் திருப்போரூர் அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயில் பல சிறப்புக்களைப் பெற்றுள்ளது. இங்கேயுள்ள முருகனைப் பக்தர்கள் குலதெய்வமாகக் கொண்டு தனி வழிபாடுகளை நடத்தி வருகின்றனர்.

**"அன்னம் அளிக்குமூர் அண்டினரைக் காக்குமூர்**

**சொன்ன மழை பொற்சொரியுமூர் – உன்னினர்குத்**

**தீது பிணி தீர்க்குமூர் செவ்வேள் இருக்குமூர்**

**ஓது திருப்போரூர் எம் ஊர்"**


என்று திருப்போரூர்ச் சந்நிதி முறையில் சிதம்பர சுவாமிகள் இவ்வூரைப் புகழ்ந்து போற்றுகின்றார்,

சென்னையிலிருந்து பழைய மாமல்லபுரம் சாலையில் சுமார் 40 கி.மீ தொலைவில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. இங்கிருந்து மாமல்லபுரம் 15 கி.மீ தொலைவிலும், திருக்கழுக்குன்றம் 18 கி.மீ, செங்கற்பட்டு 25 கி.மீ, திருவிடந்தை கோயில் 11 கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளன. தாம்பரம், அடையாறு, பிராட்வே, தி.நகர் ஆகிய இடங்களிலிருந்து நகரப் பேருந்துகளும், தனியார் பேருந்துகளும் இவ்வூருக்கு வந்து செல்வதால் எளிதாக இக்கோயிலுக்குச் சென்று வழிபடலாம்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றாலும் இத்தலம் புகழ் பெற்று விளங்குகிறது, இத்தலத்திற்கு யுத்தபுரி என்ற பெயரும் உண்டு, முருகன் சூரபத்மனோடு கடலிலே போர் புரிந்த தலம் திருச்செந்தூர், நிலத்திலே போர் புரிந்த தலம் திருப்பரங்குன்றம், விண்ணிலே போர் புரிந்த தலம் திருப்போரூர் ஆகும். முருகப்பெருமான் அசுரர்களின் ஆணவத்தை அழித்து அவர்களுக்கு ஞானம் அளித்த சிறப்பான தலம் திருப்போரூர். எனவே தான் இவ்வூர் சமரபுரி, போரியூர், செருவூர், போரிமாநகர், சமரப்பதி எனப் பலப் பெயர்களால் போற்றி அழைக்கப்படுகிறது. இப்பகுதியில் பலர் சமரபுரி என்ற பெயரைச் சூட்டிக் கொண்டுள்ளனர். இது இத்தலத்தின் பெயருக்குள்ள மகிமையை உணர்த்துவதாக உள்ளது.


### ஸ்ரீமத் சிதம்பர சுவாமிகள்

திருப்போரூர் திருக்கோயில் மிகத் தொன்மையானதாக விளங்கினாலும் கால வெள்ளத்தால் சுவடற்று அழிந்துபோனது. 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் மதுரையில் இருந்து இங்கு வந்த ஸ்ரீமத் சிதம்பர சுவாமிகள் இக்கோயிலைக் கண்டுபிடித்து திருப்பணி செய்து குடமுழுக்கு விழா நடத்தினார்கள். அந்நாளில் இப்பகுதி பெரிய பனங்காடாக இருந்தது. இவ்விடத்தில் ஒரு பெண் பனை மரத்தடியில் முருகப்பெருமான் சுயம்பு மூர்த்தியாக அவருக்குக் காட்சி அளித்தார். அவ்விடத்திலேயே முருகனுக்கு ஆலயம் எழுப்பப்பட்டது. இப்போது கருவறையில் வள்ளி, தெய்வானையுடன் காட்சி தரும் பெரிய முருகப் பெருமானின் திருவுருவம் சுயம்புத் திருமேனியாகும். இந்த மூல மூர்த்திக்குப்



புனுகுச் சட்டம் சார்த்தி கவசம், திருவாபரணம் முதலானவற்றை அணிவிக்கின்றனர். கீழே ஒரு சிறு பீடத்தில் முருகப்பெருமான் அட்சமாலை, கமண்டலம், அபய வரத முத்திரை தாங்கிய கரங்களுடன் ஞான மூர்த்தி வடிவில் அபிஷேக மூர்த்தியாகக் காட்சி தருகிறார். இம்மூர்த்தியைச் சிதம்பர சுவாமிகள் அபிடேக வழிபாட்டுக்காக அமைத்துள்ளார். சிதம்பர சுவாமிகளைத் தொடர்ந்து வந்த அருளாளர்களும் இக்கோயிலைப் போற்றிப் பல திருப்பணிகளைத் தொடர்ந்து செய்து வந்துள்ளனர்.

## திருக்கோயில் அமைப்பு



கிழக்கு நோக்கிய திருக்கோயில், கோயிலின் முன்பு தெற்குப் பகுதியில் என்றும் வற்றாத திருக்குளம் அமைந்துள்ளது. இது சரவணப்பொய்கை என்றும் வள்ளையார் ஓடை என்றும் அழைக்கப்படுகிறது. கோயில் நுழைவு வாயிலின் முன்புறம் பலிபீடம், கொடிமரம், மயில்வாகன மண்டபம் ஆகியவை அமைந்துள்ளன. இந்த மண்டபம் வட்டமானதாக கண்ணைக்கவரும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதையடுத்து உள்ளே நுழைகிறோம் கருவறையில் சுயம்பு வடிவமாக முருகன் இருபெரும் தேவியர்களுடன் எழுந்தருளி அருள்புரிகின்றான். கருவறைக்கு எதிரில் முருகனின் வாகனமான யானை இறைவனை நோக்கியுள்ளது. கருவறையைச் சுற்றியுள்ள திருச்சுற்றில் கணபதி, பிரம்மசாஸ்தா, துர்க்கை, அகஸ்தியர், வீரபத்ரர், வீரபாகு சந்நதிகளும் அமைந்துள்ளன. இங்கு தெய்வயானை நாயகிக்கும், வள்ளி நாயகிக்கும் தனித்தனி சந்நிதிகள் உள்ளன. யுத்தம் முடிந்ததும் தெய்வயானையை இத்தலத்தில் மணந்து மகிழ்ந்ததால் அவளுடைய சந்நிதி பிரதானமாகத் தெற்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது.

## யந்திர ஸ்தாபனம்

இத்திருச்சுற்றில் வடகிழக்கில் ஸ்ரீசிதம்பர சுவாமிகள் அமைத்துள்ள யந்திரஸ்தாபனம் எனப்படும் சக்கரம் மிகவும் சக்தி வாய்ந்ததாகும். இதற்கு தினமும் பூஜை நடைபெறுகிறது. சுந்த சஷ்டி நாட்களில் விசேஷ அபிடேகமும் யந்திர மாலா பூஜையும் செய்யப்படுகின்றன. இங்கு பிரார்த்தனை செய்து கொண்டு அபிடேகம் செய்து வழிபடும் அன்பர்கள் தாம் நினைத்தது நிறைவேறி நலமடைகின்றனர் என்று கூறுகின்றனர். குறிப்பாகத் திருமணம், பிள்ளைப்பேறு வேண்டிப் பலர் வழிபடுகின்றனர். இந்த யந்திரம் அழகிய பிரபையுடனும் பீடத்துடனும் விளங்குகிறது.

## முருகனது வடிவங்கள்



வெளித் திருச்சுவற்றில் உள்ள சர்வவாத்ய மண்டபம் சிற்பக் கருவூலமாக அமைந்துள்ளது. தூண்களில் குதிரை வீரர்களும், அதன் அடிப்பகுதியில் முருகப்பெருமானின் பல்வேறு வடிவங்களான சக்திதரன், ஸ்கந்தன், சேனாபதி, சுப்ரமணியன், கஜவாகனன், கார்த்திகேயன், பிரம்மசாஸ்தா, வள்ளி கல்யாணசுந்தரர், சிகிவாகனர் போன்ற வடிவங்களும் அழகிய சிற்பங்களாகக் காட்சியளிக்கின்றன. குறிப்பாக அகத்தியருக்கு அருள்புரியும் ஞானஸ்கந்தன், ஆட்டு வாகனத்தில் எழுந்தருளியுள்ள அஜாரூடர் முதலியவை தனிச் சிறப்புப்பெற்ற வடிவங்களாகும்.

இக்கோயிலில் நவக்கிரக வழிபாடு இல்லை. சூரியன் மேற்கு பார்த்தும், சனீசுவரன் கிழக்கு நோக்கியும் தனிதனிச் சந்நதியாக அமைக்கப்பட்டிருப்பதும் சிறப்புதான்.

### ஸ்ரீசிதம்பர சுவாமிகள் சந்நதி

வடக்குப் பிராகாரத்தில் ஸ்ரீமத் சிதம்பர சுவாமிகளின் சந்நதி தெற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. சந்நதியின் முகப்பில் பனை மரத்தடியில் முருகப் பெருமானை சுயம்பு மூர்த்தியாக வழிபட்ட நிகழ்ச்சி சுதை சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது.

இச்சந்நதிக்கு எதிரில் வான்மீகேசுவரர், புண்ணிய காருண்ய அம்மன் சந்நதியும் அருகில் தல விருட்சமான வன்னி மரமும், பைரவர் சந்நதியும் அமைந்துள்ளன. இக்கோயிலில் தினசரி பூஜை வான்மீகேசுவரிடம் துவங்கி எல்லா சந்நதிகளிலும் நடைபெற்று கடைசியில் பைரவர் சந்நதியில் முடிவடைகிறது. இங்குள்ள வன்னி மரத்தில் மக்கள் குழந்தை வேண்டிப் பிரார்த்தித்துக் கட்டிய அனேக தொட்டில்களைக் காண்கின்றோம்.

### 16 கால் மண்டபம்

திருக்கோயிலுக்கு கிழக்கில் சந்நதி தெருவில் கோயிலின் முன்புறம் 16 கால் மண்டபம் அமைந்துள்ளது. இதனை ஒரு கலைக்கூடம் என்றே சொல்லலாம். அந்த அளவுக்கு அழகிய வேலைப்பாடுகளைக் கொண்டுள்ளது. அழகிய சிற்பங்களின் தொகுப்பாகக் காட்சியளிக்கிறது. சிவபெருமானின் பல்வேறு மூர்த்தங்களும், முருகப் பெருமானின் பல்வேறு வடிவங்களும் இதில் இடம் பெற்றுள்ளன. முருக பக்தர்கள் அவசியம் கண்டுகளிக்க வேண்டிய மண்டபம் இது.

### பிரணவமலை

இக்கோயிலுக்கு மேற்கில் சிறிய குன்று உள்ளது, பிரணவமே முருகப்பெருமானை பூஜித்து மலை வடிவில் அமைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. இப்பிரணவ மலை மீது பாலாம்பிகை சமேத கைலாசநாதர் கோயில் அமைந்துள்ளது. இது தொன்மையான கோயிலாகும். இக்கோயிலில் சிவராத்திரி, பிரதோஷம், திருப்படித் திருவிழா முதலியன சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன.

### அரிய முருகன் திருமேனிகள்

இக்கோயிலில் வழிபாட்டில் இருக்கும் இரண்டு அரிய திருமேனிகளை கண்டு வணங்குவோம், இதில் முதலாவது பிரணவ மந்திரத்தின் பொருளைச் சிவபெருமானுக்கு முருகன் உபதேசிக்கும் உபதேச மூர்த்தி வடிவமாகும். இது மிகவும் அற்புதமானது. இதில் சிவன் வீராசனத்தில் பத்ம பீடத்தில் வாய்பொத்தி அமர்ந்திருக்க, அவர் மடிமீது முருகன் பத்மபீடத்தின் மேல் அமர்ந்து உபதேசம் செய்யும் வகையில் குருவாக காட்சி அளிக்கிறார். இவரை

**"மதியும் அரவமும் நதியும் இதழியும்**
**வைத்த செஞ்சடை அத்தனார்**
**அதிக தயவுடன் ஒரு சொல் மொழி என**
**அருள் செய் பர குரு தேசிகன்''**

எனப் போற்றி மகிழலாம். ஈசருடன் ஞான மொழி பேசும் சுவாமி நாதனை கண்டு வணங்குவோம். இரண்டாவது வடிவம் முத்துக் குமாரசுவாமியாகும் இதில் அசுரர்களை எதிர்த்துப் போர் செய்ய முருகன் புறப்படுகிறார். வாகனமான மயில் உடலை விரித்து ஆணைக்காக கழுத்தை வளைத்து தயாராக உள்ளது. வலக்காலை மயிலின் மீது வைத்து இடது முன் கரத்தில் வில்லும் வலது முன் கரத்தில் அம்பும் வைத்திருக்கும் பாவனையில் கம்பீரமாகக் காட்சி அளிக்கிறார். 'ஏறு மயில் ஏறும்' இந்த கந்தப் பெருமானைப் பார்த்து வணங்கி மகிழ்வோம்.

### சிதம்பர சுவாமிகள் மடம்

இவ்வூருக்கு அருகே கண்ணுவர் பேட்டையில் ஸ்ரீசிதம்பர சுவாமிகள் முக்தியடைந்த திருக்கோயிலும் மடமும் உள்ளன. அது பக்தர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. வைகாசி மாதம் விசாக நட்சத்திர நாள் குரு பூஜை நடைபெறுகிறது. பௌர்ணமி நாட்களிலும் சிறப்பான வழிபாடுகள் நடைபெறுகின்றன. இவ்வூருக்கு சிதம்பர சுவாமிகள் முதன் முதலில் வந்தபொழுது தங்கி வழிபட்ட வேம்படி விநாயகர் கோயிலும் சிறப்பானது. மேலும் திருப்போரூர் மௌன சுவாமிகள் மடமும், கிராமத்துக் கோயில்களும் அனைவராலும் சிறப்பாக வழிபாடு செய்யப்படுகின்றன.

### இலக்கியச் சிறப்பு

திருப்போரூர் முருகப் பெருமானை பல அருளாளர்கள் போற்றிப் பாடியுள்ளனர். பக்தி

இலக்கியங்களை எழுதியுள்ளனர். "சகல லோகமுமாசறு சகல வேதமும் தொழ, சமரமாபுரி மேவிய பெருமானே" என அருணகிரி நாதர் திருப்புகழில் போற்றுகின்றார். ஸ்ரீ சிதம்பர சுவாமிகள் 726 பாடல்களைக் கொண்ட 'திருப்போரூர்ச் சந்நிதி முறை' என்ற பக்தி இலக்கியத்தில்

**'இல்லறத்தான் அல்லேன் இயற்கை துறவியல்லேன்**

**நல்லறத்து ஞானி அல்லேன் நாயினேன் – சொல்லறத்தின்**

**ஒன்றேனும் இல்லேன் உயர்ந்த திருப்போரூரா**

**என்றே நான் ஈடேறுவேன்'**

என்று கேட்கிறார்.

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அருளிய 'திருப்போரூர் பதிகம்' இராமநாதபுரம் சோம சுந்தரம் பிள்ளை இயற்றிய 'திருப்போரூர் அந்தாதி' திருமயிலை ராகவதாசர் இயற்றிய கந்தர் கழலணி விண்ணப்பமாலை, அருட்கவி சாதுராம் சுவாமிகள் இயற்றிய திருப்போரூர் அந்தாதியும், வே. முத்துசாமி ஐயர் இயற்றிய திருப்போரூர் முருகன் இரட்டை மணிமாலை ஆகியவையும் இத்தலத்தின் பெருமைகளை பக்தி மணம் கமழ எடுத்துரைக்கின்றன.

## வழிபாடு, திருவிழாக்கள்

இக்கோயிலில் காலை, உச்சி, மாலை, இரவு ஆகிய நான்கு கால அபிடேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. அனைத்து மாதங்களிலும் பரணி, கார்த்திகை நாட்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. மாசி மாதத்தில் நடைபெறும் ஆண்டுப் பெருவிழா (பிரம்மோற்சவம் சிறப்பானது. இத்திருவிழாவில் நடைபெறும் தேர்த்திருவிழா, தெப்பத்திருவிழா, வள்ளித் திருமணம் முதலியன சிறப்பான நிகழ்ச்சிகளாகும். ஐப்பசி மாதத்தில் கந்த சஷ்டிப் பெருவிழா, தைப்பூசம், பங்குனி உத்திரம் போன்ற திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. கோயிலுக்கு வரும் பக்தர்கள் முடி காணிக்கை செலுத்தியும், பத்தியுடன் அலகு குத்தி காவடி எடுத்து வருவதும், துலாபாரம் நிறைவேற்றுவதும் ஆக தங்களது பிரார்த்தனைகளை நிறைவேற்றுகின்றனர்.



சிறந்த வழிபாட்டுத் தலமாக விளங்கும் திருப்போரூர் அருள்மிகு கந்தசாமித் திருக்கோயிலுக்கு சென்று வழிபட்டு வாழ்வில் எல்லா நலன்களையும் அடைவோம்.

**'நோயுற்ற இடராமல் நொந்து மனம் வாடாமல்**

**பாயிற் கிடவாமல் பாவியேன் – காயத்தை**

**ஓர் நொடிக்குள் நீக்கி எனை ஒண்போரூர் ஐயா நின்**

**சீரடிக்கீழ் வைப்பாய் தெரிந்து'**

**– திருப்போரூர் சந்நிதி முறை.**

**கி.ஸ்ரீதரன்கண்காணிப்பாளர் (ஓய்வு)**

**தொல்லியல் துறை, சென்னை.**

சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் : த. பிச்சாண்டி, இ.ஆ.ப. சிறப்பு ஆணையர். இந்து சமய அறநிலையத் துறை, சென்னை – 600 034. தொலைபேசி எண் : 28334811 / 12 / 13

ஆசிரியர் (கூ.பொ) : ம. தேவேந்திரன், பி.எஸ்ஸி.,பி.எல்., துணை ஆணையர்

அச்சிடுவோர் : சக்தி ஸ்கேனர்ஸ் பிரைவேட் லிட்., சென்னை – 86. தொலைபேசி எண் : 23450920 / 28117575

# மக்களைத் தேடி மாவட்ட அளவில் அலுவலகங்கள்
# இந்து சமய அறநிலையத் துறை உதவி ஆணையர் அலுவலகங்கள்
# ஐந்து மாவட்டங்களில் உதயம்

இந்து சமய அறநிலையத் துறையில் இதுவரை 22 மாவட்டங்களில் உதவி ஆணையர் அலுவலகங்கள் இயங்கிவந்தன. ஒரு சில மாவட்டங்களை சில உதவி ஆணையர் அலுவலகங்களோடு இணைக்கப்பட்டு அனைத்து மாவட்டத்திலுள்ள திருக்கோயில் நிர்வாகங்களும் கண்காணிக்கப்பட்டு வந்தன. **திருவள்ளூர், திருவாரூர், கரூர், திண்டுக்கல், நாமக்கல்** மாவட்டங்களைச் சேர்ந்த அறங்காவலர்கள், பக்தர்கள், ஆன்மிக பெருமக்கள் போன்றோர் விடுத்த கோரிக்கையை கனிவுடன் பரிசீலித்த மாண்மிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மேற்கண்ட 5 மாவட்டங்களில் உதவி ஆணையர் அலுவலகங்கள் ஏற்படுத்திட ஆணையிட்டார்கள். அதன் பலனாக இந்த 5 மாவட்டங்களுக்கும் பொதுமக்களின் நீண்ட தூர பயணம் போன்ற இடர்பாடுகளை களைய புதியதாக உதவி ஆணையர் அலுவலகங்கள் 15–04–2008 அன்று துவங்கப்பட்டன.

இதன் மூலம் இந்து சமய அறநிலையத் துறையில் உள்ள உதவி ஆணையர் அலுவலகங்களின் எண்ணிக்கை 27 ஆக உயர்ந்துள்ளது.





திருவள்ளூர் மாவட்டத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் புதிய உதவி ஆணையர் அலுவலகத்தை **மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள்** 15.04.2008 அன்று குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்கள்.

உதவி ஆணையர்அலுவலக துவக்க விழா மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கே.பி.பி.சாமி அவர்கள் தலைமையில், மாண்புமிகு மத்திய தொடர்வண்டித் துறை இணை அமைச்சர் அரங்க. வேலு அவர்கள், திருப்பெரும்புதூர் பாராளுமன்ற உறுப்பினர் அ.கிருஷ்ணசாமி, அவர்கள் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் இ.ஏ.பி. சிவாஜி அவர்கள், மாவட்ட ஆட்சியர் டாக்டர் இராஜேந்திர குமார், அவர்கள் அறநிலையத் துறை அரசுச் செயலாளர் திரு.கோ.சந்தானம், அவர்கள் சிறப்பு ஆணையர் திரு.த.பிச்சாண்டி, அவர்கள் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

விரைவு, கனிவு மற்றும் நம்பகத்தன்மை இவையே ரெப்கோவின் தனிச்சிறப்பு

# ரெப்கோ வங்கி

(இந்திய அரசு நிறுவனம்)

த.அ. 33, வடக்கு உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை – 600 017

தொ.பே. 28342845, 28340715 E-mail : ho@repcobank.co.in Website : repcobank.co.in

உங்கள் இல்லம் தேடி வரும் இனிய வங்கி

"வாடிக்கையாளர் சேவையில் புதிய பரிமாணம்"

## சிறப்பான முதலீட்டு திட்டங்கள்

- மற்ற அரசுடைமை வங்கிகளைக் காட்டிலும் அதிக வட்டி (ஆண்டுக்கு 10% வரை மூத்த குடிமக்களுக்கு கூட்டு வட்டி 13.44% வரை)
- மாதாந்திர சேமிப்பிற்கும் 10% வரை வட்டி
- உங்கள் முதலீடுகளுக்கு முழு பாதுகாப்பு
- முழுவதும் கணினிமயமாக்கப்பட்ட சேவை
- உங்கள் கடை / வீட்டிலிருந்தே தினசரி சேமிப்பு மற்றும் கடன் வசூல் செய்யும் வசதி
- கனிவான, துரித, நிறைவான சேவை
- வாடிக்கையாளர் சேவையில் 38 ஆண்டுகள்

## எளிய கடன் திட்டங்கள்

- உடனடி நகைக் கடன்
- தொழில் / வியாபார விரிவாக்கக் கடன் அசையாச் சொத்தின் மேல் திருமணம், மருத்துவ செலவு மற்றும் தொழில் கடன்
- சிறுவணிகர் கடன்
- வாகன வசதிக் கடன்
- கனவு இல்லத்திற்கான, விரைவான வீட்டு கடன் திட்டங்களுக்கு பிரத்யேக நிறுவனம்
- ரெப்கோ ஹோம் ஃபைனான்ஸ் லிட்.,
- மகளிர் சுய உதவிக் குழு உருவாக்கம், பயிற்சி மற்றும் கடன் உதவிக்கு – ரெப்கோ
- நுண்கடன் நிறுவனம்

ADYAR (044) 2440 4570 CHENNAI (044) 2499 6161 GEORGE TOWN (044) 2523 3895 PADI (044) 2654 4416 PALLAVARAM (044) 2264 2398 RED HILLS (044) 2641 9176 TAMBARAM (044) 2226 2883 T-NAGAR (044) 2834 2347 TONDIARPET (044) 2595 4055 VYASARPADI (044) 2673 1048 COIMBATORE (0422) 2490562 COIMBATORE CORP.(0422) 2218766 COONOOR (0423) 2231456 DINDIGUL (0451) 2424375 ERODE (0424) 2254118 GUDALUR (04262) 263949 KARAIKUDI (04565) 239798 KARUR (04324) 231391 KUMBAKONAM (0435)2402779MADURAI (0452) 2342875 NAMAKKAL (04286) 232875 PATTUKOTTAI (04373)253299 PUDUKOTTAI (04322)226282SALEM(0427)2266531 THANJAVUR (04362)237295 THENI (04546) 262450 THIRUNELVELI (0462)2579136 TIRUPPUR (0421) 2232792 THIRUVANNAMALAI (04175) 252808 THOOTHUKUDI (0461)2333908 TRICHY (0431)2701090 VALPARAI (04253)222602 VELLORE (0416) 2226837 PONDICHERRY (0413)2330068

பதிவு எண் : TN/PMG/(CCR)/707/06-08/WPP No.451/06-08